

ஆண்டறிக்கை

2020

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையானது, பல்கலைக்கழகத்தினது கல்வி நடவடிக்கைகள் மற்றும் அடைவுகள் பற்றிய நிறுவன கண்ணோட்டத்தின் விரிவான சுருக்கத்தை வழங்குகிறது. இதில் உள்ள தகவல்கள் உரிய துறைகளினால் சமர்ப்பிக்கப்பட்டு தகவல் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவினால் தொகுக்கப்பட்டுள்ளது.

நோக்கு

விஞ்ஞானங்கள், தொழிநுட்பங்கள், மானிடவியல்களில் உயர்கற்கைகளுக்கும், புத்தாக்கங்களுக்குமான தென்னாசியாவின் ஒரு சர்வதேச புகழ்பெற்ற நிலையமாக விளங்குதல்.

இலக்கு

பிராந்திய மற்றும் தேசிய தேவைகள், சமூக நல்லிணக்கம், பங்காளார்களின் வலுவாக்கம், திருப்தி என்பவற்றை நோக்காகக் கொண்டு அறிவினையும், புத்தாக்கங்களையும் உருவாக்கி பரப்புவதன் ஊடாக சர்வதேச தரத்திலான உயர் கற்கைகளுக்கான விரிவான வாய்ப்புகளை வழங்குதல்.

குறிக்கோள்கள்

1. கல்வித் தரத்தில் சிறந்து விளங்குதல்.

2. ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் அறிவுப் பரவல் ஆகியவற்றில் சிறந்து விளங்குதல்.

3. சமூக மற்றும் தொழிற்துறை எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதில் சிறந்து விளங்குதல்.

4. உட்கட்டமைப்பு மற்றும் மனித வள மேம்பாட்டில் சிறந்து விளங்குதல்.

5. தேசிய மற்றும் உள்ளக ஒத்துழைப்பில் சிறந்து விளங்குதல்.

6. நல்லாட்சி மற்றும் நிலைப்பேறு ஆகியவற்றில் சிறந்து விளங்குதல்.

உபவேந்தரின் செய்தி



பேராசிரியர். எம்.எம்.எம். நாஜிம்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2020ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையானது மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் அடைவுகளின் அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் அடைவுகளை சிறப்பித்துக் காட்டுகிறது. மேலும் சமூக மற்றும் தேசிய அபிவிருத்தியில் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பினையும் வருடாந்த அறிக்கையானது விபரித்துக்காட்டுகிறது. இவ்வருடாந்த அறிக்கையானது 2019-2024 காலப்பகுதிகளுக்குத் தயாரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டங்களுக்கமைய பல்கலைக்கழகத்தின் அடைவுகளை பகுப்பாய்வு செய்கின்ற அதேவேளை, குறைபாடுகளையும் அவற்றிற்கான பொருத்தமான நியாயப்படுத்தல்களையும் குறிப்பிட்டுக்காட்டுகின்றது.

“Vistas of Prosperity and Splendor” உடன் இணைந்த அரசாங்கத்தின் கொள்கைகளை பல்கலைக்கழகம் செயற்படுத்தி வருகிறது. மேலும், திறைசேரி நிதி மற்றும் AHEAD நிதி உதவியுடன், பல்கலைக்கழகத்தின் செயற்திறன் மற்றும் மாணவர்களுக்கான சேவைகளின் தரம் மேம்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, மாணவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக பல சிறிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன, இச்செயற்பாடானது இறுதியில் மாணவர்கள் தங்களது திறன் மேம்பாட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கும். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழிநுட்ப பீட கட்டிடம் மற்றும் பல்நோக்கு கேட்போர் கூடம் குறிப்பாக மாணவர்களின் நலனுக்காகவும் பல்கலைக்கழகத்தின் பொது நலனுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஸ்கோபஸ் (Scopus), ஸிமாகோ (Scimago) மற்றும் கிளாரிவேட் அனாலிட்டிக்ஸ் (Clarivate Analytics)

தரவுத்தளங்கள் போன்ற நன்கு அறியப்பட்ட தரவுத்தளங்களில் குறியிடப்பட்ட ஆய்விதழ்களில் வெளியீடுகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதில் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்கள் குறிப்பிடத்தக்க வகையில் பங்களித்துள்ளனர். வெபோமெட்ரிக் உலக தரவரிசையில் பல்கலைக்கழகம் முன்னேறி வருகிறது. மேலும், பல்கலைக்கழகங்களின் நிலைத்தன்மை செயற்திறன் அடிப்படையில் பல்கலைக்கழகங்களை தரவரிசைப்படுத்தும் UI GreenMetric உலக பல்கலைக்கழக தரவரிசையின் கீழ் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையே முதலிடத்தைப் பெற்றதன் மூலம் பல்கலைக்கழகம் அதன் வரலாற்றில் ஒரு அழியாத முத்திரையைப் பதித்துள்ளது. மேலும், பல நன்கு தகுதி வாய்ந்த கல்வியாளர்கள் மற்றும் பிற ஊழியர்களுடன் சேர்ந்து பல்கலைக்கழகத்தின் மனித மூலதனம் பலப்படுத்தப்பட்டது. அதே சமயம், சில கல்வியாளர்களை பேராசிரியர்களாக உயர்த்தியமை, சேவைகளை வழங்குவதில் பல்கலைக்கழகத்தின் திறனை மேலும் அதிகரித்தது.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2020ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பல்கலைக்கழகத்தின் சாதனைகள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள ஆராயலாம். அத்தோடு 2020ம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் செயற்திறனை உயர்த்துவதற்காக கடினமாக உழைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர். எம்.எம்.எம். நாஜிம்
உபவேந்தர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

உள்ளடக்கம்

தொ.இல	தலைப்பு	பக்க இல.
	நோக்கு	
	இலக்கு	
	குறிக்கோள்கள்	
	உபவேந்தரின் செய்தி	
1.	பல்கலைக்கழக செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு	01
	சுருக்கமான அறிமுகம்	01
	நிறுவன கட்டமைப்பு	02
	பல்கலைக்கழக பேரவை	03
	பல்கலைக்கழக மூதவை	05
	தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள்	09
	பட்டப்பின்படிப்பு கற்கைகள்	12
	ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கல்வி நிகழ்ச்சிகள்	14
	உலக தரப்படுத்தல்	14
	மாணவர் பரம்பல்	15
	ஊழியர் பரம்பல்	15
	கல்விசார் பதவியணியினர் பரம்பல்	16
	நிலைப்பேறான அபிவிருத்தி	17
	சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	21
	இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகங்கள்	23
	அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள்	26
	தவறுகளும் நியாயப்படுத்தல்களும்	32
	எதிர்காலத் திட்டங்கள்	33
2.	வளங்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பான விபரம்	35
3.	உள்நாட்டு மாணவர்கள் விபரம்	36
4.	வெளிநாட்டு மாணவர்கள் விபரம்	41
5.	பட்டம் பெற்றோர் விபரம்	42
6.	ஆளணி விபரங்கள்	44
7.	கல்விசார் மற்றும் கல்வியுதவி ஊழியர்கள்	45
8.	நிர்வாக, நிதி நிர்வாக மற்றும் ஏனைய நிறைவேற்று, மற்றும் கல்விசாரா ஊழியர்	46
9.	2020ம் ஆண்டில் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ள பட்டம் பெறுவோர் விபரம்	47
10.	ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரம்	49
11.	2020ம் ஆண்டில் பொது மக்களுக்கு அறிவூட்டுதல் தொடர்பில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான விபரம்	75
12.	பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் பற்றிய விபரம்	76
13.	2020ம் ஆண்டில் கல்விசார் மற்றும் நிர்வாக ஊழியர்களின் தொழில் மேம்பாட்டிற்காக பெறப்பட்ட வெளிநாட்டு கூட்டுறவு, புலமைப்பரிசில்கள் / விருதுகள் பற்றிய விபரங்கள்	77

14.		2020 இல் பட்டப்பின்படிப்பு பட்டக்கற்கைகளுக்கு பதிவுசெய்த கல்விசார் மற்றும் நிர்வாக ஊழியர்கள் (உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் பதிவு செய்தவர்கள்) விபரம்	79
15.		2020 இல் தொடர்புடைய பட்டப்பின் படிப்புகளைப் பூர்த்தி செய்த கல்விசார், கல்வி உதவி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் விபரம்	79
16.		நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளின் விபரங்கள்	80
17.		செயற்திட்டங்களுக்கான செலவீடுகள் தொடர்பான விபரம்	84
18.		நிதி முன்னேற்ற விபரம்	84
	18.1	வருமானம்	84
	18.2	பிரதான திட்டங்களுக்கான மீண்டுவரும் செலவினம்	85
	18.3	மூலதனச் செலவினம்	85
	18.4	செலவினம்	86
19.		நிதிச் செயல்திறன் பகுப்பாய்வு – 2020	86
	19.1	தலா மாணவருக்கான செலவு (மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்கள்)	86
20.		வருடாந்த கணக்குகள் – 2020	87
21.		கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2020	105
22.		கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான அவதானங்கள்	114

1. பல்கலைக்கழக செயற்பாடுகள் தொடர்பிலான மீளாய்வு


சுருக்கமான அறிமுகம்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (இ.தெ.கி.ப.க) 1995ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் பிரதான வளாகமானது, 178.98 ஏக்கர் (2011 இலான நில மதிப்பீட்டின்படி) பசுமையான நிலப்பரப்பில், ஒலுவில் கடற்கரையோரத்தின் வழியே அமைந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் கிழக்குப் பகுதியில் (ஒலுவில் வளாகத்தில்) தொடர்ச்சியான மண் அரிப்பு இருப்பதால், இதுவரையில் பல்கலைக்கழகம் சுமார் 25.45 ஏக்கர் நிலப்பரப்பினை இழந்துள்ளது. பிரயோக விஞ்ஞானங்கள் பீடமானது 6.72 ஏக்கர் நிலப்பரப்பில் (2011 இலான நில மதிப்பீட்டின்படி) சம்மாந்துறையில் அமையப்பெற்றுள்ளது. தொழிநுட்ப பீடத்தின் கீழ் வருகின்ற மல்வத்தை பண்ணையானது (35.25 ஏக்கர் நிலப்பரப்பில், 2011 இலான மதிப்பீட்டின்படி) விவசாய தொழிநுட்பத்தில் செயன்முறை வகுப்புகள் நடாத்துவதற்காகவும் அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகமானது உயர் கல்வித் துறையில் ஒரு மிகப்பெரிய முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் உள்ள தனியார் அமைப்புகள் மற்றும் அரச துறைகளால் வேண்டப்படுகின்ற தொழில்சார் தகைமையுள்ள பட்டதாரிகளை உருவாக்கத்தக்க முதற்தரமான கல்விசார் கொள்கைகளைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் அதனுடன் அக்கறையுடையோர் மற்றும் சமுதாயத்தினரின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் பல்வேறுபட்ட நெறிமுறைகளை வளர்க்கத்தக்க ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. அத்தோடு, இப்பிராந்தியத்தின் சமாதானத்திற்கும் இன நல்லிணக்கத்திற்கும் பாரிய பங்களிப்பை இப்பல்கலைக்கழகம் செய்து வருகின்றது. தற்போது இப்பல்கலைக்கழகம் ஆறு பீடங்களையும் 5,558 பட்டப்படிப்பு உள்வாரி மாணவர்களையும், 405 பட்டமேற்படிப்பு பட்டதாரி மாணவர்களையும் கொண்டுள்ளது. 189 கல்விசார் ஊழியர்கள் உள்ளடங்களாக பல்கலைக்கழகத்தில் 662 நிரந்தர ஊழியர்கள் உள்ளனர்.

தனது பெயரை சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாகத் திகழச்செய்வதில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் சிறந்த கல்விசார் திறனோடு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது.

நிறுவன கட்டமைப்பு
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்



SSSW- மாணவர் உதவி மற்றும் நலன்புரி சேவைகள் பிரிவு
OSPIM- மூலோபாய திட்டமிடல் மறறும் செயற்படுத்தல் கண்காணிப்பு அலுவலகம்
RIC- ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையம்
CEDPL- வெளிவாரிப் பட்டப் படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்
CGU- தொழில் வழிகாட்டல் பிரிவு
SDC- ஊழியர் அபிவிருத்தி நிலையம்
CGEE – பாலின சமநிலை மற்றும் சமத்துவத்திற்கான மையம்
UBL Cell- பல்கலைக்கழக வணிக இணைப்பு பிரிவு
MIT- முகாமைத்துவ தகவல் தொழிநுட்பம்
CQA- தர உத்தரவாத மையம்

DR- பதில் பதிவாளர்
DB- பதில் நிதியாளர்
SAB- சிரேஷ்ட உதவி நிதியாளர்
SAR- சிரேஷ்ட உதவி பதிவாளர்
SAIA- சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்
W/E- வேலைப் பொறியியலாளர்
AR- உதவி பதிவாளர்
AB- உதவி நிதியாளர்
AIA – உதவி உள்ளக கணக்காய்வாளர்
CSO - தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தர்

SALB- சிரேஷ்ட உதவி நூலகர்
ALB- உதவி நூலகர்
AS- உதவி புள்ளிவிபரவியலாளர்

பல்கலைக்கழக பேரவை

பல்கலைக்கழக பேரவையானது பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகார சபையாகவும், பரிபாலன அதிகார சபையாகவும் காணப்படுகின்றது. பதவிவழி உரிமையால் உபவேந்தர் இதன் தவிசாளராக செயற்படுவார். பல்கலைக்கழக மூதவையினாலும், பீட சபைகளினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணைகளை அங்கீகரிக்கின்ற இறுதி அதிகார அமைப்பாக இது காணப்படுகின்றது. பேரவையின் உப குழுக்களாக நிதிக்குழு, ஆளணிக்குழு, காணி, கட்டிட பராமரிப்புக் குழு போன்றன காணப்படுகின்றன. பதிவாளர் பேரவையின் செயலாளராவார்.

பதவிவழி உறுப்பினர்கள்

பேராசிரியர். எம்.எம்.எம். நாஜிம்	உபவேந்தர்
கலாநிதி. எஸ்.எம். ஜுனைதீன்	பீடாதிபதி/பொறியியல் பீடம்
கலாநிதி. எஸ்.எம்.எம். மஸாஹிர்	பீடாதிபதி / இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம்
கலாநிதி. எஸ். குணபாலன்	பீடாதிபதி/முகாமைத்துவ வர்த்தக பீடம்
கலாநிதி. யூ.எல். சைனுதீன்	பீடாதிபதி /பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
பேராசிரியர். ஏ. றமீஸ்	பீடாதிபதி/ கலை கலாசார பீடம்
கலாநிதி. யூ.எல்.ஏ. மஜீட்	பீடாதிபதி/தொழிநுட்ப பீடம் *(29.01.2020 முதல்)*
கலாநிதி எம்.ஜி. மொஹம்மட் தாரிக்	பீடாதிபதி/தொழிநுட்ப பீடம் *(28.01.2020 வரை)*

மூதவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

கலாநிதி எம்.எச். ஹாறூன் *(24.06.2020 முதல்)*

கலாநிதி எஸ்.சபீனா.எம்.ஜி. ஹுஸன் *(24.06.2020 முதல்)*

பேராசிரியர். எம்.ஏ.எம். றமீஸ் *(17.05.2020 வரை)*

பேராசிரியர். ஏ. ஜௌபர் *(17.05.2020 வரை)*

நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

திரு. ஐ.எம். ஹனீபா

கலாநிதி. அன்வர் எம். முஸ்தபா

பொறியியளாளர். முஹினுதீன் அப்துல் காதர்

கலாநிதி. ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். ரஜப்

பொறியியளாளர். என்.டி. மொஹமட் சிராஜுடீன்

திரு. எம்.சி. மொஹமட் நவாஸ்

பேராசிரியர். கொலின் என். பீரிஸ்

திரு. ஜே.எம். நளீர்

திரு. டி.எம்.எல். பண்டாரநாயக்க

பேராசிரியர். ஹேமா எம்.கே.கே. பத்திரன *(02.10.2020 முதல்)*

கலாநிதி. ஏ.எம்.பீ.டி.கே. அதிகாரி *(30.09.2020 வரை)*

செயலாளர்

திரு. எச். அப்துல் சத்தார், பதிவாளர்

பல்கலைக்கழக மூதவை

பல்கலைக்கழக மூதவையானது பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கான அதிகார சபையாகும். பொதுவாக இக்குழு பல்கலைக்கழக சமூகத்திற்கும் பொதுமக்களுக்கும் சிறந்த வினைத்திறன்மிக்க கல்விசார் பெறுபேறுகளை உறுதிசெய்யும் கடப்பாடுகளோடு, பீடங்கள், துறைகள், அலகுகள் என்பவற்றின் ஊடாக பல்கலைக்கழகத்தின் கற்பித்தல், கற்றல், ஆய்வு, பாடவிதான வடிவமைப்பு, பரீட்சை முறைமைகள் போன்ற செயற்பாடுகளை கட்டுப்படுத்தி வழிநடாத்துகின்றது. அத்துடன் பீட சபைகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரேரணைகளை பேரவையின் இறுதி அங்கீகாரத்திற்காக சிபார்சு செய்கின்றது. நூலகக் குழு, கல்வி விடுமுறை மற்றும் வழங்கல் குழு, அனுமதிக் குழு, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக் குழு, பாடவிதான மதிப்பீட்டுக்குழு என்பன இதன் உபகுழுக்களாகும். பதிவாளர் மூதவையின் செயலாளராகவுள்ளார்.

பதவிவழி உறுப்பினர்கள்

பேராசிரியர். எம்.எம்.எம். நாஜிம்	உபவேந்தர்
கலாநிதி. எஸ்.எம். ஜுனைதீன்	பீடாதிபதி/பொறியியல் பீடம்
கலாநிதி. எஸ்.எம்.எம். மஸாஹிர்	பீடாதிபதி / இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம்
கலாநிதி. எஸ். குணபாலன்	பீடாதிபதி/முகாமைத்துவ வர்த்தக பீடம்
கலாநிதி. யூ.எல். சைனுதீன்	பீடாதிபதி /பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
பேராசிரியர். ஏ. றமீஸ்	பீடாதிபதி/ கலை கலாசார பீடம்
கலாநிதி. யூ.எல்.ஏ. மஜீட்	பீடாதிபதி/தொழிநுட்ப பீடம் *(29.01.2020 முதல்)*
கலாநிதி. எம்.ஜி மொஹமட் தாரிக்	பீடாதிபதி/தொழிநுட்ப பீடம் *(28.01.2020 வரை)*
பேராசிரியர். எம்.ஏ.எம். றமீஸ்	
பேராசிரியர். திருமதி. எப்.எச்.ஏ. றௌப்	
பேராசிரியர். ஏ.எல்.ஏ. றௌப்	
பேராசிரியர். ஏ.எம். முசாதிக்	
பேராசிரியர். எம்.பி.எம். இஸ்மாயில்	

பேராசிரியர். ஏ. ஜௌபர்	துறைத் தலைவர்/கணக்கியல் நிதித் துறை
பேராசிரியர் எம்.ஏ.எல். அப்துல் ஹலீம்	
பேராசிரியர். எம்.ஐ.எம். கலீல்	
திரு. எம்.எம். றிபாவுதீன்	நூலகர்
கலாநிதி. (திருமதி). எஸ். சபீனா எம்.ஜீ. ஹஸன்	துறைத் தலைவர்/முகாமைத்துவ துறை
பொறியியளாளர் எம்.சி. றியாஸ்	துறைத் தலைவர் / குடிசார் பொறியியல் துறை *(14.09.2020 முதல்)*
கலாநிதி. ஜே.ஏ. தம்பு	துறைத் தலைவர்/குடிசார் பொறியியல் துறை *(13.09.2020 வரை)*
பொறியியலாளர். எம்.ஐ. இல்ஹாம் ஜஸீல்	துறைத் தலைவர்/துறைசார் கற்கைகள் பிரிவு
கலாநிதி. எம்.ஏ.எஸ்.எப். ஸாதியா	துறைத் தலைவர்/மொழிகள் துறை
கலாநிதி. ஏ.எம்.எம். நவாஸ்	துறைத் தலைவர்/ஆங்கில மொழி கற்பித்தல் துறை
திருமதி எம்.சி.எஸ் சாதிபா	துறைத் தலைவர்/அரபுமொழி துறை *(24.12.2020 முதல்)*
கலாநிதி. ஏ.ஆர். நசார்	துறைத் தலைவர்/அரபுமொழி துறை *(29.11.2020 வரை)*
கலாநிதி. எம்.எம். பாஸில்	துறைத் தலைவர்/அரசறிவியல் விஞ்ஞானங்கள் துறை
கலாநிதி. எம்.ஐ.எம். ஜெஸீல்	துறைத் தலைவர்/இஸ்லாமிய கற்கைகள் துறை
கலாநிதி. எம்.எம். முனீப்	துறைத் தலைவர்/உயிர்முறைமைகள் தொழிநுட்ப துறை *(29.01.2020 முதல்)*
கலாநிதி. யூ.எல்.ஏ. மஜீட்	துறைத் தலைவர்/உயிர்முறைமைகள் தொழிநுட்ப துறை *(28.01.2020 வரை)*
கலாநிதி. எம்.எச். ஹாரூன்	துறைத் தலைவர்/இரசாயனவியல் துறை
கலாநிதி. ஏ.ஏ.எம். நுபைல்	துறைத் தலைவர் /பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை

கலாநிதி. எஸ். அனுாஸியா	துறைத் தலைவர்/சமூக விஞ்ஞானங்கள் துறை
கலாநிதி. (திருமதி.) வீ. சுஜாராஜினி	துறைத் தலைவர்/உயிரியல் விஞ்ஞானங்கள் துறை
கலாநிதி. எம்.ஐ.எம். ஹிலால்	துறைத் தலைவர்/சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறை
திரு. எம்.எச்.எம். றினோஸ்	துறைத் தலைவர்/புவியியல் துறை
கலாநிதி. எஸ்.எம். ஐயூப்	துறைத் தலைவர்/சமூகவியல் துறை
திரு. ஏ.எல். ஹனீஸ்	துறைத் தலைவர்/கணித விஞ்ஞானங்கள் துறை
கலாநிதி. பீ.எம்.கே. அலஹகோன்	துறைத் தலைவர்/ இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் துறை
கலாநிதி. (திருமதி). ஏ.எம்.என்.எம். அதிகாரம்	துறைத் தலைவர் / பௌதீகவியல் துறை
கலாநிதி. டபுள்யூ.ஜீ.சீ.டபுள்யூ. குமார	துறைத் தலைவர் / கணனி விஞ்ஞான பொறியியல் துறை
கலாநிதி. யூ. பாருக்	துறைத் தலைவர்/இயந்திரவியல் பொறியியல் துறை
திரு. கே. முஹம்மட் ரிப்தி	துறைத் தலைவர்/ தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறை
திரு. எஸ். சப்ராஸ் நவாஸ்	துறைத் தலைவர்/ முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழிநுட்பத் துறை

தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள்

பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்

திரு. எம்.ஏ.ஏ.எம். பஹாம்

கலாநிதி. ஏ.எம். றஸ்மி

கலை கலாசார பீடம்

திரு. ஏ. விக்ரமரட்ன *(02.06.2020 முதல்)*

திரு. எம்.ஏ.எம். சமீம் *(10.09.2020 முதல்)*

கலாநிதி. ஏ.எப்.எம். அஸ்ரப் *(12.03.2020 வரை)*

பேராசிரியர். எம்.ஐ.எம். கலீல் *(27.07.2020 வரை)*

இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம்

கலாநிதி. ஆர்.ஏ. சர்ஜூன்

திருமதி. எம்.சி.எஸ். சாதீபா *(23.12.2020 வரை)*

முகாமைத்துவ வர்த்தக பீடம்

கலாநிதி. ஏ. ஹலீம்

கலாநிதி. எம்.சி.ஏ. நாசர்

பொறியியல் பீடம்

பொறியியலாளர். ஏ.எல்.எம். றிஸாத்

கலாநிதி. ஜே.ஏ.எஸ்.பீ. ஜயகொடி

தொழிநுட்ப பீடம்

திரு. ஆர்.கே.ஏ. ரிபாய் காரியப்பர்

கலாநிதி. ஏ.என்.எம். முபாரக்

செயலாளர்

திரு. எச். அப்துல் சத்தார், பதிவாளர்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது கலை கலாசார பீடம், முகாமைத்துவ வர்த்தக பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம், இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழிநுட்ப பீடம் ஆகிய ஆறு பீடங்களைக் கொண்டுள்ளது. இலங்கைத் தென்கிழக்குப் பல்லைக்கழகம் இளமானி, முதுமானி பட்டப்படிப்புகள், டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் என்பவற்றை நடாத்துகின்றது.

பல்கலைக்கழகமானது உள்ளூர் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதில் உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து செயற்படுகிறது. கல்விசார் துறைகள் மற்றும் பீடங்களால் வழங்கப்படும் கற்கைகள் பின்வரும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 1.1: கல்விசார் துறைகள் மற்றும் பிரிவுகளின் விபரங்கள்

கலை கலாசார பீடம்
சமூக விஞ்ஞானங்கள் துறை
மொழிகள் துறை
அரசியல் விஞ்ஞானங்கள் துறை
சமூகவியல் துறை
பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை
புவியியல் விஞ்ஞானங்கள் துறை
ஆங்கில மொழி கற்பித்தல் துறை
பட்டமேற்படிப்பு பிரிவு

முகாமைத்துவ வர்த்தக பீடம்
கணக்கியல் நிதித் துறை
முகாமைத்துவத் துறை
முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பமும் துறை
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை
பட்டமேற்படிப்பு பிரிவு
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்
உயிரியல் விஞ்ஞானங்கள் துறை
கணிதவியல் விஞ்ஞானங்கள் துறை
பௌதீகவியல் விஞ்ஞானங்கள் துறை
இரசாயனவியல் விஞ்ஞானங்கள் துறை
இஸ்லாமியக் கற்கைகள் அரபுமொழி பீடம்
இஸ்லாமியக் கற்கைகள் துறை
அரபுமொழித் துறை
துறைசார் கற்கை பிரிவு
பொறியியல் பீடம்
குடிசார் பொறியியல் துறை
இயந்திரப் பொறியியல் துறை
மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறை
கணனி விஞ்ஞான பொறியியல் துறை
துறைசார் கற்கைகளுக்கான துறை
தொழிநுட்ப பீடம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறை
உயிர்முறைமைகள் தொழிநுட்ப துறை

அட்டவணை 1.2: பீடங்களால் வழங்கப்படும் கற்கைகள் (உள்வாரி)

இளமானி பட்டப்படிப்பு கற்கைகள்	SLQF Level	பொது/ விசேடம்	கால அளவு	மொழி மூலம்
கலை கலாசார பீடம்				
கலைகள் இளமானி பட்டம்	5	பொது	3 வருடங்கள்	தமிழ்
அரசியல் விஞ்ஞானத்தில் கலைகள் இளமானி கௌரவப் பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	தமிழ்
பொருளியலில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்/ ஆங்கிலம்
மெய்யியலும் உளவியல் ஆற்றுப்படுத்தலிலும் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்
சமூகவியலில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்/ ஆங்கிலம்
புவியியலில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்/ ஆங்கிலம்
தமிழில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்
ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்
இந்து நாகரீகத்தில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்
மும்மொழிக் கற்கைகளில் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		மும்மொழி
முகாமைத்துவ வர்த்தக பீடம்				
வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
வர்த்தக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்
முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பத்தில் விஞ்ஞான இளமானி பட்டம்	5	பொது	3 வருடங்கள்	
கணக்கியலில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
நிதியியலில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		
மனிதவள முகாமைத்துவத்தில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		
தகவல் முறைமையில் வியாபார நிர்வாக இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		

இளமானி பட்டப்படிப்பு கற்கைகள்	SLQF Level	பொது / விசேட	கால அளவு	மொழி மூலம்
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்				
உயிரியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமானி பட்டம்	5	பொது	3 வருடங்கள்	ஆங்கிலம்
பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	5	பொது	3 வருடங்கள்	
பிரயோக உயிரியலில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
தாவரவியலில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
பிரயோக புள்ளிவிபரவியலில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
கணிதத்தில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
பிரயோக விஞ்ஞானங்களில் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	
இஸ்லாமியக் கற்கைகள் அரபுமொழி பீடம்				
கலைகள் இளமானி பட்டம்	5	பொது	3 வருடங்கள்	தமிழ்
இஸ்லாமிய சிந்தனையும் நாகரீகமும் இல் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	தமிழ்
இஸ்லாமிய வங்கியியலும் நிதியும் இல் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்
இஸ்லாமிய சட்டமும் சட்டவாக்கமும் இல் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		தமிழ்
அரபு மொழியும் இலக்கியமும் இல் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		அரபு மற்றும் தமிழ்
மொழியியலும் மொழிபெயர்ப்பிலும் கலைகள் இளமானி கௌரவ பட்டம்	6	விசேடம்		அரபு, ஆங்கிலம் மற்றும் தமிழ்
மும்மொழிக் கற்கைகளில் கலைகள் இளமானி கௌரவ பட்டம் (கலை கலாசார பீடத்துடனான இணைந்த கற்கை நெறி)	6	விசேடம்		ஆங்கிலம்
பொறியியல் பீடம்				
பொறியியல் விஞ்ஞான இளமானி கௌரவ பட்டம்	7	விசேடம்	4 வருடங்கள்	ஆங்கிலம்
தொழிநுட்ப பீடம்				
விவசாய தொழிநுட்பத்தில் உயிர்முறைமைகள் தொழிநுட்ப இளமானி பட்டம்	6	விசேடம்	4 வருடங்கள்	ஆங்கிலம்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப இளமானி பட்டம்	6	விசேடம்		ஆங்கிலம்

SLQF Level - இலங்கை தகுதிக்கட்டமைப்பு நிலை

அட்டவணை 1.3: சான்றிதழ் கற்கைகள் மற்றும் டிப்ளோமா கற்கைகள் (வெளிவாரி)

சான்றிதழ் கற்கைகள்			
கற்கைநெறியின் பெயர்	**SLQF Level**	**கால அளவு**	**மொழி மூலம்**
ஆங்கில மொழி சான்றிதழ் கற்கை	1	06 மாதங்கள்	ஆங்கிலம்
டிப்ளோமா பாடநெறிகள் (பட்டப் பின்படிப்பு அல்லாத)			
கற்கைநெறியின் பெயர்	**SLQF Level**	**கால அளவு**	**மொழி மூலம்**
ஆற்றுப்படுத்தலில் தொழில்சார் டிப்ளோமா கற்கை	3	18 மாதங்கள்	தமிழ்
ஆங்கில மொழி டிப்ளோமா கற்கை	3	12 மாதங்கள்	ஆங்கிலம்
இதழியல் டிப்ளோமா கற்கை	3	12 மாதங்கள்	தமிழ்

SLQF Level - இலங்கை தகுதிக்கட்டமைப்பு நிலை

அட்டவணை 1.4: இளமானி பட்டப்படிப்பு கற்கைகள் (வெளிவாரி)

இளமானி கற்கை நெறிகள் (வெளிவாரி)				
கற்கைநெறியின் பெயர்	**SLQF Level**	**விசேடம்/ பொது**	**கால அளவு**	**மொழி மூலம்**
கலை கலாசார பீடம்				
கலைகள் இளமானி	5	பொது	3 வருடங்கள்	தமிழ்
முகாமைத்துவ வர்த்தக பீடம்				
வியாபார நிர்வாக இளமானி	5	பொது	3 வருடங்கள்	ஆங்கிலம் மற்றும் தமிழ்
வர்த்தக இளமானி	5	பொது	3 வருடங்கள்	

SLQF Level - இலங்கை தகுதிக்கட்டமைப்பு நிலை

பட்டப்பின்படிப்பு கற்கைகள்

கலை கலாசார பீடம், முகாமைத்துவ வர்த்தக பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் மற்றும் தொழிநுட்ப பீடம் ஆகிய பீடங்கள் பட்டப்பின்படிப்பு கற்கைகளை வழங்குகின்றன (அட்டவணை 1.5). பல்கலைக்கழகமானது 2020ம் ஆண்டில் 04 தத்துவமானி, 14 வியாபார நிர்வாக முதுமானி மற்றும் 03 கலை முதுமானி பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது.

அட்டவணை 1.5: பட்டப்பின்படிப்பு கற்கைகள்

பீடங்கள்	பட்டப்பின்படிப்பு கற்கைகள்	SLQF Level	முழு நேரம் /பகுதி நேரம்	கால அளவு	மொழி மூலம்
கலை கலாசார பீடம்					
தமிழில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா		8	பகுதி	01 வருடம்	தமிழ்
தமிழில் முதுமானி		10	பகுதி	02 வருடங்கள்	தமிழ்
தமிழில் தத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	தமிழ்
புவியியலில் தத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
மெய்யியலில் தத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
அரசறிவியல் விஞ்ஞானத்தில் தத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
சமூகவியலில் தத்துவமானி		11	முழு/பகுதி	02 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
தமிழில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
புவியியலில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
மெய்யியலில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
அரசறிவியல் விஞ்ஞானத்தில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
சமூகவியலில் கலாநிதி		12	முழு/பகுதி	03 வருடங்கள்	தமிழ்/ ஆங்கிலம்
முகாமைத்துவ வர்த்தக பீடம்					
முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா		8	முழு	01 வருடங்கள்	ஆங்கிலம்
வியாபார நிர்வாக முதுமானி		10	முழு	02 வருடங்கள்	ஆங்கிலம்
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்					
பிரயோக புள்ளிவிபரவியலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா		8	பகுதி	01 வருடங்கள்	ஆங்கிலம்
தொழிநுட்ப பீடம்					
உயிர்முறைமைகள் தொழிநுட்பத்தில் கலாநிதி		12	முழு	3 வருடங்கள்	ஆங்கிலம்
			பகுதி	4.5 வருடங்கள்	ஆங்கிலம்
உயிர்முறைமைகள் தொழிநுட்பத்தில் தத்துவமானி		11	முழு	2 வருடங்கள்	ஆங்கிலம்
			பகுதி	3 வருடங்கள்	ஆங்கிலம்

ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கல்வி நிகழ்ச்சிகள்

இ.தெ.கி.ப.க. ஆனது நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பல புதிய பட்டப்படிப்பு கற்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கலை கலாசார பீடமானது "கல்வி" பாடநெறியில் கௌரவ இளமானி பட்டப்படிப்பை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவினை ப.மா.ஆ.வின் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளது. அதேவேளை கலை கலாசார பீடமானது "வரலாறு" பாடநெறியில் கௌரவ இளமானி பட்டப்படிப்பினைத் தொடங்குவதற்கான முன்மொழிவினை உருவாக்கி தொடர்புடைய அதிகாரிகளின் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளது.

முகாமைத்துவ தகவல் தொழிநுட்பத்தில் வியாபார நிர்வாக இளமானி (சிறப்பு) பட்டம் மற்றும், தொழில்முனைவோர் துறையில் வியாபார நிர்வாக இளமானி (சிறப்பு) பட்டம் போன்றவற்றைத் தொடங்குவதற்கான முன்மொழிவினை முகாமைத்துவ வர்த்தக பீடம் உருவாக்குகிறது.

கணனி விஞ்ஞானத்தில் டிப்ளோமா கற்கையினைத் தொடங்குவதற்கான முன்மொழிவினை பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் உருவாக்கியுள்ளதுடன் பீட சபையின் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கிறது. மேலும், உயிரியல் விஞ்ஞானங்கள், இரசாயனவியல் விஞ்ஞானங்கள், பௌதீக விஞ்ஞானங்கள், கணனி விஞ்ஞானங்கள் மற்றும் பிரயோக புள்ளிவிபரவியல் மற்றும் கணிதம் போன்ற கற்கை சபையினை உருவாக்குவதன் மூலம் ஆராய்ச்சி மூலமான பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளை பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் துவங்க உள்ளது.

இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதியியலில் கலைகள் இளமானி வெளிவாரிப் பட்டப்படிப்பினைத் தொடங்குவதற்கான முன்மொழிவினை இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடம் உருவாக்கி வருகிறது. மேலும் அப்பீடமானது அரபு மொழியில் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைகளை தொடங்குவதற்கு பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவையின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது.

உலக தரப்படுத்தல்

இணையத்தள அளவீட்டில் (வெபோமெற்றிக்) இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் 2021 ஜனவரியில் 8029ம் இடத்திலுள்ளது. சிறந்த சேவைகளை வழங்க கடினமாக முயற்சி செய்கின்ற கல்வி நிறுவனங்களின் போட்டிமிக்க உலகில்,

பல்கலைக்கழகங்களின் தரவரிசைப்படுத்தலில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மேலும் முன்னிலைப்படுத்துவதற்குத் தேவையான அளவீடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மாணவர் பரம்பல்


திசெம்பர் 2020 இன்படி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 5558 ஆகும். அட்டவணை 1.6 ஆனது ஒவ்வொரு பீடத்திற்கும் இடையிலான மாணவர்களின் விகிதாசார பரம்பலைக் காட்டுகிறது.

அட்டவணை 1.6: 31 திசெம்பர் 2020 இன்போதான பீட ரீதியான மாணவர் பரம்பல்

பீடம்	மாணவர்களின் எண்ணிக்கை	சதவீதம் (%)
கலை கலாசார பீடம்	1183	21
முகாமைத்துவ வர்த்தக பீடம்	1277	23
பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்	769	14
இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடம்	1274	23
பொறியியல் பீடம்	441	8
தொழிநுட்ப பீடம்	614	11

ஊழியர் பரம்பல்


திசெம்பர் 2020 இன்படி பல்கலைக்கழகத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை (நிரந்தர ஊழியர்கள்) 662 ஆகும். விளக்கப்படம் 1.1, ஊழியர் பிரிவின் விகிதாசார பரம்பலைக் காட்டுகிறது.




விளக்கப்படம் 1.1 : திசெம்பர் 2020 இன்போதான ஊழியர்களின் பரம்பல்

கல்விசார் பதவியணியினர் பரம்பல்

விளக்கப்படங்கள் 1.2 மற்றும் 1.3 முறையே பதவி மற்றும் கல்வி நிலை ஆகியவற்றின் அடிப்படையில் கல்விசார் ஊழியர்களின் (நூலக ஊழியர்கள் நீங்கலாக) பரம்பலைக் காட்டுகிறது.



விளக்கப்படம் 1.2: (31 திசெம்பர் 2020 இன் போதான பதவி அடிப்படையிலான கல்விசார் ஊழியர்களின் பரம்பல் (நூலக ஊழியர்கள் நீங்கலாக)



விளக்கப்படம் 1.3: 31 திசெம்பர் 2020 இன் போதான கல்வித் தகைமை அடிப்படையிலான கல்விசார் பதவியணியினரின் பரம்பல் (நூலக ஊழியர்கள் நீங்கலாக)

நிலைப்பேறான அபிவிருத்தி

2019 முதல் 2023 வரையான ஆண்டுகளுக்கான மூலோபாயத்திட்டம் தயாரிக்கப்பட்டது. நிலைப்பேறான அபிவிருத்தியுடன் தொடர்புடைய 6வது குறிக்கோளின் கீழ்வருகின்ற 6.4 மற்றும் 6.6வது நோக்கங்களுக்கான உத்திகள், முக்கிய செயலாற்றல் சுட்டிகள் (KPIs), இலக்குகள் போன்றனவும் 2020ம் ஆண்டின் போதான செயலாற்றல் சுட்டிகள் மீதான அடைவுகளும் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிக்கோள் 6: நல்லாட்சி மற்றும் நிலைப்பேறு

நோக்கம் 6.4: பன்முகப்படுத்தப்பட்ட வருமான வளங்களை உருவாக்குவதன் மூலமும், சிறந்த நிர்வாகத்தை கட்டியெழுப்புவதன் மூலமும் பல்கலைக் கழகத்தின் நிதி நிலைப்பேற்றை மேம்படுத்துதல்.

நோக்கம் 6.6: நிலைப்பேறான அபிவிருத்தித் திட்டங்களை நோக்கி பல்கலைக் கழக ஊழியர்கள் மற்றும் நிறுவன பொறுப்புக்களை மேம்படுத்துதல்.

அட்டவணை 1.7: குறிக்கோள் 6 இன் 6.4. மற்றும் 6.6 ஆவது நோக்கங்களின் செயலாற்றல் சுட்டிகள் தொடர்பில் 2020ல் மேற்கொள்ளப்பட்ட அடைவுகள்

குறிப்பு இல	உபாயங்கள்	செயலாற்றல் சுட்டிகள்	இலக்கு	2020 இற்கான அடைவு
6.4.1	இ.தெ.கி.ப.க இன் மூலோபாயத்திட்டம் மற்றும் பிரதான திட்டத்தை செயற்படுத்த நிதி திரட்டும் நோக்கில் தகுந்த போட்டி மூலங்கள் மற்றும் பரோபகார வளங்களைத் தேடவும், பிரச்சாரம் செய்யவும், கேள்வி மனுக்களைக் கோரவும், பல்கலைக் கழகத்தின் நிதி திரட்டும் குழுவை அமைத்தல்	மொத்த வருமானத்தில் திரட்டப்பட்ட (நிதியளிக்கப்படாத மானியமற்ற) வருடாந்த வருமானத்தின் சதவீதம்	மொத்த வருமானத்தை விட திரண்ட (மானியமற்ற) வருடாந்த வருமானத்தின் சதவீத்தை 2023 இற்குள் குறைந்தது 10% ஆக அதிகரித்தல்	2020ம் ஆண்டிக்கான வருமானம் பின்வரும் மூலங்களிலிருந்து ரூபா. 24,822,561 ஆகக் கணக்கிடப் பட்டது: பதிவு, பரீட்சை, வட்டி, விற்பனை மற்றும் ஏனைய மூலங்கள்
6.4.2	உயர்கல்விக்கு அதிகரித்த அனுகலை வழங்குவதற்கான அரசாங்கத்தின் கொள்கைக்கு பெருமளவில் ஆதரவு வழங்குவதற்காக அதிக நிதியை பெற்றுக் கொள்வதற்காக மாநில அதிகாரங்களை இணங்கச் செய்தல்	குவைத் நிதிய வாய்ப்புகளின் பயன்பாடு	2023 இற்குள் பிரதான திட்டத் தின்கீழ் மீத முள்ள செயற் திட்டங்களுக்கு குறைந்தது 50% நிதி உதவி செய்வ தற்கான குவைத் நிதிய வாய்ப்புகளின் பயன்பாட்டை அதிகரித்தல்	குவைத் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட 2020ம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூபா 64.5 மில்லியன் ஆகும்.
6.4.3	மீள் முதலீட்டு மிகைகளை உருவாக்கு	வருடாந்த மூலதன	வருடாந்த போட்டி	கல்வி நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து

	வதற்குப் பரந்த அள விலான நிதி சாத்தி யமான கல்வி நிகழ்ச் சித் திட்டங்கள் மற்றும் விரிவாக்க நடவடிக்கை களை அறிமுகப்படுத்த பீடங்கள் வெளிவாரிப் பட்டங்கள், தொழில்சார் கற்கைகள் மற்றும் ஏனைய செயற்பாட்டு பிரிவுகளை ஊக்குவித்தல்	மானியம், வருடாந்த போட்டி மானியம் இடையேயான விகிதம்	மானியம், வருடாந்த மூலதன மானியம் இடையேயான விகிதத்தை குறைந்தது 0.3: 1 ஆக 2023 இற்குள் உயர்த்துதல்	நிதி திரட்டுவதற் கான ஒரே ஒரு மையப்படுத்தப்பட்ட அலகு "வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் அலகு ஆகும். 23.366: 322 மில்லியன்
6.4.4	தற்போதுள்ள வெளிவாரி/பகுதி நேர கற்கை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அதிகமானவர்களை உள் வாங்கும் நோக்கில் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் பிரிவில் கற்பித்தல், கற்றல் முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகளைப் பலப்படுத்தல்	அனுமதி அளவு: மூலதன மானியத்தின் சதவீதப் பயன்பாடு (பகிர்வு)	வருடாந்த மூலதன மானியத்தின் சதவீதப் பயன்பாட்டை (அதாவது வளங்கள்) குறைந்தது 95% ஆக உயர்த்துதல்	மூலதன மானியத்திலிருந்து எதுவும் பயன்படுத்தப் படவில்லை **குறிப்பு:** CEDPL மூலமான சுய நிதி திரட்டல்
6.4.5	வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் வணிக மாதிரியை சீர்திருத்து வதன் மூலம் பல்வேறு பீடங்கள் / பல்கலைக் கழகங்களால் ஒத்து ழைக்கப்படும் நிதி ரீதியான சாத்தியமான பல்துறை சார் கல்வி தொழில் முறைத் திட்டங்களை வழங்கல்	தலா மாணவருக்கான செலவினைக் குறைத்தல்	2023 இற்குள் தலா மாணவருக்கான செலவினை 4% இனால் குறைத்தல்	2019ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தலா மாணவருக்கான செலவில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
6.4.6	பல்கலைக்கழகத்தின் நிதியறிக்கைகளின் தராதரத்தை மேம்படுத்தி அவற்றை வெளிப்படையாகப் பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல்			நிதியறிக்கைகள் பொதுவாக நிதிக் குழுவிற்கு சமரப்பி க்கப்படுகின்றன. இவ்வறிக்கை அனைத்து பீடங் களுக்கும் அனுப் பப்படுகின்றது. அதே வேளை வருடாந்த அறிக் கையானது பராளு மன்றத்தில் சமர்ப் பிக்கப்படுகின்றது.
6.4.7	பீடங்கள், அலகுகள் மற்றும் ஒட்டுமொத்த பல்கலைக்கழகத்தின் காலாண்டு நிதி/வரவு செலவு செயற்பாட்டினை உள்ளக ரீதியில் வெளியிடுவதன் மூலம் வெளிப்படைத்தன்மை, பண்புகள், நிதி ஆய்வு			செயற்பாட்டின் தரம் மற்றும் வெளிப்படைத் தன்மையினைப் பேணுவதற்காக, அறிக்கைகள், பீடங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய

	மற்றும் பொறுப்புக் கூறல் போன்றவற்றை செயலாக்கல்			துறைகளுக்கு வழங்கப்படுகின்றன
6.4.8	முலதனம், ஆராய்ச்சி மற்றும் மனித மேம் பாட்டு செயற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் திரண்ட வருமானத்தின் மீள் முதலீட்டை நிறுவன நிலைப் பேற்றுக்காக அதிகரித்தல்			2 மில்லியன் ரூபா ஆராய்ச்சி மற்றும் மனித அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது
6.4.9	நிதிப் பயன்பாட்டுத் திறன் மற்றும் செயற் திறனை மேம்படுத்தும் பொருட்டு பல்கலைக் கழகத்தில் பெறுமதி சேரா நிர்வாக/ தற்காலிக நடை முறைகள் அனைத்தையும் நீக்குதல்			GRN, SRN போன்றவற்றிக்கான நடைமுறைகள் வினைத்திறனான செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக கணனி மயமாக்கப் பட்டுள்ளன
6.4.10	எதிர்கால வள ஒதுக்கீட்டைத் தெரிவிப்பதற்காக முந்தைய செலவு தொடர்பான விபரம், சொத்துக்களின் பயன்பாடு மற்றும் பீடங்கள், அலகுகளின் பொறுப்புக் கூறலைப் பயன்படுத்தல்			வழமையான செயற்பாடு
6.4.11	வினைத்திறனான சொத்துப்பயன்பாட்டைக் கண்காணிக்கவும் மேம்படுத்தவும் கணக் கெடுப்புக்களைச் செய்வதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்கிச் செயற்படுத்தல்			சுற்றுநிரூபத்திற்கிண ங்க ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படுகிறது
6.4.12	மீண்டெழும் செலவினங் களைச் சேமித்து மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் வழுவூட்ட ல் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு அதைப் பயன்படுத்தல்			அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டுப் பாட்டுப் பொறி முறை உரிய துறைத் தலைவர் களால் பின்பற்றப் பட்டுள்ளன
6.6.1.	நிலைப்பேறான அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பல்கலைக்கழக கற்பித்தல், கற்றல், கொள்முதல் மற்றும் முகாமைத்துவ அபிவிரு த்தித் திட்டங்களை தெரிவிப்பதற்கான நிறுவன கொள்கைக் கட்டமைப்பை உருவாக்குதல்	உயர் கல்விக்கான மாணவர் அனுமதி	2023ல் மாணவர் அனுமதியினை 25%இனால் அதிகரித்தல்	2017/2018 மற்றும் 2018/2019 கல்வியாண்டுகளு க்கான மாணவர் அனுமதிகள் முறையே 1540 மற்றும் 1521 ஆகும்.
6.6.2	எமது கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு உத்திகளில்,	சக்தி வினைத்திறன்: தனிநபருக்கான	தனி நபருக் கான மின்சார நுகர்வினை	சராசரி மாதாந்த பாவனை : தலா மாணவருக்கு 17.5

	பாடத்திட்டத்தினூடாக நிலைப்பேறான மேம்பாட்டு உத்திகளை ஒருங்கிணைத்தல்	மின்சார நுகர்வு	(ஒரு மாணவருக்கான மின்சார நுகர்வு) 2023 இல் ஆகக் குறைந்தது 5% இனால் குறைத்தல்	அலகுகள்
6.6.3	மேம்பட்ட திட்டமிடல், மேற்பார்வை மற்றும் வினைத்திறனான பொறுப்புள்ள நடவடிக்கைகள் மூலம் மின்சாரம் மற்றும் நீர்வளங்களின் நிலைப்பேறான நுகர்வினை ஊக்குவித்தல்	தனிநபருக்கான தண்ணீர் நுகர்வு	தனி நபருக்கான தண்ணீர் நுகர்வினைக் குறைத்தல் (ஒரு மாணவருக்கான தண்ணீர் நுகர்வு) 2023 இல் ஆகக் குறைந்தது 5% இனால் குறைத்தல்	சராசரி மாதாந்த பாவனை : தலா மாணவருக்கு 1.29 அலகுகள்
6.6.4	ஒழுங்கான மற்றும் தொழில் முறை கணக்காய்வு மூலம் நிலைப்பேற்றுக்கான பொதுப் பொறுப்புக் களை உறுதிப்படுத்த உள்ளக கணக்காய்வு பிரிவை வலுப்படுத்தல்			அவற்றிற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன
6.6.5	நிலைப்பேறான அபி விருத்தி இலக்கு களை நோக்கி மாணவர்கள், ஊழியர்கள், சிறு தொழில் முயற்சியாளர் கள் மற்றும் பொது மக்களின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்காகத் தொடர்ந்தும் விழிப்புணர்வு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்			தொழில் வழிகாட்டல் பிரிவு, ஊழியர் மேம்பாட்டு மையம், மாணவர்கள் ஆதரவு சேவை ப்பிரிவு, நூலகம் மற்றும் பீடங்கள் போன்றன ஒவ் வொரு வருடமும் இது போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துகின்றன.
6.6.6	புதுப்பிக்கத்தக்க / சுத்தமான எரிசக்தி மூலங்கள் மற்றும் மீள்சுழற்சி உட் கட்டமைப்புகளில் முதலீடு செய்தல்.			கழிவு நீர் சுத்திக ரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டது (அட்டவணை 1.8)

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1. **வருடாந்த மரநடுகைத் திட்டம்**
   - பல்கலைக்கழக தாபகர் தினம்
   - வருடத்தின் முதல் நாள்
   - சுதந்திர தினம்
   - நாட்டின் தேசிய மர நடுகைத் திட்டம்

     உதாரணம்: மரங்களின் பெயர்: அர்ஜுனா, காயா, புக்மே, சிலோன் கருங்காலி, இலுப்பா, மஹோகனி, றம்புடான் மற்றும் மஞ்சாடி.

2. **பருவகால திட்டம்**
   - மழைக்காலம் தொடங்கும் முன், தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தை மரம் நடுவதற்கு தயார் செய்தல்.
   - தாவரங்களின் அழகியல் மதிப்பை மேம்படுத்துவதற்காக உயிரியல் செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிக்கும் பொருட்டு மரங்கள் மற்றும் புதர்களைக் கத்தரித்தல்.
   - கலியோடை ஆற்றின் அருகே அர்ஜுனா மரங்களை நடல்.
   - பல்கலைக்கழகத்திலுள்ள உயிர் பன்முகத்தன்மையை பேணுதல்.

3. **மாதாந்த திட்டம்.**
   - நடப்பட்ட பகுதியில் இடைவெளிகளை நிரப்புதல்

     உதாரணம்: வழி ஓரம் மற்றும் ஆற்றின் ஓரம்
   - இயற்கை வனப்புடைய புதிய பகுதியை நிறுவுதல்

4. **தினசரி நிகழ்ச்சி**
   - உலர்ந்து விழுந்த இலைகளை சேகரித்து சேதன உரம் தயாரித்தல்.
   - எதிர்கால மர நடுகைக்காக தாவர நாற்றுமேடையில் புதிய செடியை நடுதல்.

- உணவுக் கழிவுகள், பொலித்தீன் கழிவுகள் மற்றும் காகிதக் கழிவுகளை தனித்தனியாக சேகரிக்க வெவ்வேறு நிறங்களிலான கழிவு சேகரிப்புத் தொட்டிகள் வைக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட கழிவுகள் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் கழிவுகள் சேகரிக்கும் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

- பல்கலைக்கழகத்தின் கிழக்குப் பகுதியில் கலியோடை ஆற்றங்கரையில் அரிப்பைக் கட்டுப்படுத்த காபியன் சுவர் (Gabion wall) நிர்மாணிக்கப்பட்டது.

- கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டது: சுத்திகரிக்கப்பட்ட நீரின் ஒரு பகுதி அலங்காரத் தோட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. அட்டவணை 1.8: நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான கழிவு நீர் சேகரிப்பு விபரங்களைக் காட்டுகிறது.

அட்டவணை 1.8: நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான கழிவு நீர் சேகரிப்பு விபரங்கள்

தொ. இல	இடம்	நாளொன்றுக்கான நீர் சேகரிப்பு (மீ³/நாள்)	அகத்துறுஞ்சல் குழியில் அகத்துறுஞ்சப்பட்ட 35% நீர்	சுத்திகரிப்பு நிலையத்திற்கான கழிவு நீர் சேகரிப்பு (மீ³/நாள்)
01	ஹெலபோஜன்	3.00	1.05	1.95
02	FVG - 01	31.00	நேரடியாக STP இற்கு அனுப்பப்படுகிறது	31.00
03	FVG - 01(A)	48.00	16.8	31.20
04	FVB - 01	21.00	7.35	13.65
05	FVB - 02	48.00	16.8	31.20
06	FVB - 03	48.00	நேரடியாக STP இற்கு அனுப்பப்படுகிறது	48.00
07	ஊழியர் விடுதிகள்	6.00	நேரடியாக STP இற்கு அனுப்பப்படுகிறது	6.00
நாளொன்றுக்கான மொத்த தண்ணீர் சேகரிப்பு (மீ³/நாள்))				163.00
நான்கு வளையங்கள்		ஓவ்வொன்றிலும் 20.00		-80.00
சுத்திகரிக்கப்பட்ட மீதியுள்ள நீர் வெளியீடு				83.00
தோட்டம் செய்யும் நோக்கங்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட நீரின் மீள் பயன்பாடு				20.00

STP- கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை

- விலங்குகள் தாவரங்கள் பல்வகைமை பல்கலைக்கழகத்தில் பேணப்படுகிறது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகங்கள்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகங்களானது பிரதான நூலகம், பிரயோக விஞ்ஞானங்கள் பீட நூலகம் மற்றும் பல்கலைக்கழக கலாசார அருங்காட்சியகம் ஆகியவற்றை உள்ளடக்கியதான நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்களின் வலையமைப்பாகும். இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் மூலோபாய திட்ட ரீதியாக செயற்படுவதுடன் தர உத்தரவாதத்திற்கான சர்வதேச சிறந்த நடைமுறையைக் குறிக்கிறது. 2020 இல் நூலகத்தின் முக்கிய சாதனைகளாவன:

i) பீடங்கள் மற்றும் மாணவர்களுடனான ஈடுபாட்டை வலுப்படுத்துவதுடன் பல ஆராய்ச்சி திறன் மேம்பாட்டுத்திட்டம், கருத்துத் திருட்டு கண்டறிதல் சேவைகள், ஆய்வுத் தேடல் மற்றும் ஆவண விநியோகச் சேவைகளை நடாத்துவதன் மூலம் ஆராய்ச்சியில் நூலகக் கல்வியாளர்களின் அதிக ஈடுபாட்டை ஊக்குவித்தல்.

ii) டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை நிர்வகிப்பதுடன் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அறிவுசார் மூலதனத்தை நிறுவன களஞ்சியத்தில் (DSpace) காப்பகப்படுத்துகிறது, இது அறிவார்ந்த பரவலை எளிதாக்குவதுடன் நிறுவனப் புலமையின் முழு விரிவையும் வெளிப்படுத்துகிறது அத்தோடு பல்கலைக்கழகத்தின் வெபோமெட்ரிக்ஸ் தரவரிசையை மேம்படுத்துகிறது. மின் களஞ்சியத்தில் 31 டிசம்பர் 2020 இன் 4204 அறிவுசார் கட்டுரைகள் காப்பகப்படுத்தப்பட்டுள்ளன, அதில் 896 கட்டுரைகள் 2020 இல் பதிவேற்றப்பட்டன. வெளி நாடுகள் உட்பட 48,793 பார்வைகள் புலமைக் கட்டுரைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

iii) பீட ஆய்விதழ்கள், மாநாட்டுப் புத்தகங்கள் (Proceedings) மற்றும் பல்கலைக் கழக வெளியீடுகளை வெளியிடுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு மதியுரை ஆலோசனைகள் மற்றும் எழுத்தாக்க உதவிகளை வழங்கியமை.

iv) இளமானி பட்டதாரிகளுக்கு ‘‘தகவல் எழுத்தறிவு திட்டங்கள்’’ குறித்த விருப்புப் பாடவிதானத்தினை கற்பித்து மதிப்பீடு செய்தமை.

v) கோவிட் 19 பரவல் காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்த வேளையில், எமது பயனாளர்களுக்கு நூலகக் கற்றல் வளங்களை தொலைதூரத்திலிருந்து அணுக உதவும் வகையில், வளாகத்திற்கு வெளியே

நூலகச் சேவைகளை வழங்க, மாணவர்கள் உட்பட முக்கிய பல்கலைக்கழக அக்கரையுடையோருடன் கூட்டாகவும் ஆக்க பூர்வமாகவும் பணியாற்றியமை.

vi) ஜப்பான் தூதரகத்திலிருந்து 829,700,39 மதிப்புள்ள "சமகால ஜப்பானைப் புரிந்து கொள்ள ஜப்பான் 100 புத்தகங்களைப் படியுங்கள்" திட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க நன்கொடை பெறப்பட்டது. இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அதிமேதகு திரு. சுகியாமா அகிரா அவர்கள் 2020 செப்டெம்பர் 28 அன்று நூலகத்திற்குச் சமூகமளித்து சேகரிப்புகளைக் கையளித்தார்.

vii) இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் 5S முறையைப் பின்பற்றி நூலகச் சேவைகளின் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

viii) நூலக கல்விசார் ஊழியர்கள் நிறுவன மீளாய்வுக்காக பல்கலைக்கழகத்தில் உற்சாகமாகப் பங்குபற்றினர். மீளாய்வுக் குழு 25.02.2020 அன்று பிரதான நூலகத்தையும், 21.02.2020 அன்று விஞ்ஞான நூலகத்தையும் பார்வையிட்டதோடு நூலக முறைமை மற்றும் சேவைகளைப் பாராட்டியது.

ix) கோவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் ஷிபோலெத் (Shibboleth) அணுகலைப் பயன்படுத்தி எமரால்ட் (EMERALD), டெய்லர் மற்றும் பிரான்சீஸ் (TAYLOR & FRANCIS) மற்றும் ஒக்ஸ்போர்ட் (OXFORD) போன்ற இலத்திரனியல் தரவுத்தளங்களுக்கு தொலை நிலை அணுகலை வழங்கியது. 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சில தரவுத்தளங்களின் பயன்பாட்டு புள்ளிவிபரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. 2020ஆம் ஆண்டில் மொத்தமாக 8,593 முழு ஆய்வுக்கட்டுரைகள் எங்கள் பயனாளர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

x) அனைத்து பீடங்களினதும் பயனாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த ஆண்டு நூலகமானது ரூபா. 396,248.23 மதிப்பில் 465 அச்சிடப்பட்ட புத்தகங்களை மட்டுமே கொள்வனவு செய்துள்ளது.

xi) 31 திசெம்பர் 2020 இன்போது 3756 பதிவுசெய்யப்பட்ட பயனாளர்கள் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளனர், அவர்களுள் 312 புதிய மாணவர்கள் மீளாய்வாண்டில் நூலக உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

xii) தொற்றுநோய் சூழ்நிலையால் புத்தக சுழற்சிகள் கணிசமாக பாதிக்கப்பட்டன. நூலக முகாமைத்துவ முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, நூலகங்கள், மொத்தமாக 31,685 உள்வருகைகள் / வெளிச் செல்லுகைகளைக் கொண்டிருந்தன. வை.ை.பை வசதிகளுடன் கூடிய பொதுவான கற்றல் இடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

xiii) காலாவதியானமைக்கான அபராதமாக மாணவர்களிடமிருந்து ரூபா. 69,700.00 பிரதான நூலகம் மூலமும், ரூபா. 2,549.00 விஞ்ஞான நூலகம் மூலமும் பெறப்பட்டது.

அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள் :

- இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆனது 2020 UI GreenMetric உலக பல்கலைக்கழக தரவரிசையில் உலகின் மிகவும் நிலையான பல்கலைக்கழகத்தில் 331வது இடத்தைப் பெற்றதுடன் நாட்டின் தரவரிசையில் 1வது இடத்தைப் பெற்றது.





- நிறுவன மீளாய்வு பெப்ரவரி 2020 இல் (24 முதல் 29 வரை பெப்ரவரி 2020) வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் கல்விசார், நிர்வாக, கல்வி உதவி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் ஒருங்கிணைந்த முயற்சிகள் தரம் "B" ஐப் பெறுவதற்கு வழிவகுத்தது.

- ஏழு கற்கை நெறிகளுக்கான தர உறுதிப்படுத்தல் மீளாய்வு முடிக்கப்பட்டுள்ளது. இதில், மூன்று கற்கைகள் "B" தரங்களைப் பெற்றுள்ள அதேவேளை, நான்கு கற்கைகள் "C" தரங்களைப் பெற்றுள்ளன. பல்கலைக்கழகத்திற்குள் தர உறுதிப்படுத்தல் முறைமையை மேம்படுத்துவதன் மூலம் எதிர்கால மீளாய்வுகளில் தரங்களை மேம்படுத்த பல்கலைக்கழகம் முயற்சிகளை எடுத்துள்ளது.

- கோவிட் 19 தொற்றுநோய் காலப்பகுதியில் இயங்கலை மூலமும் நேரடியாகவும் இறுதி அரையாண்டுத் தேர்வுகள் மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

- 2018/2019 கல்வியாண்டிற்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ள முடிந்ததுடன் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் இயங்கலை மூலம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

- புவியியல், தத்துவம், அரசியல் விஞ்ஞானம், சமூகவியல் மற்றும் தமிழ் போன்றவற்றில் ஆராய்ச்சி மூலமான முது தத்துவமானி/கலாநிதி போன்ற பட்டப்பின் கற்கைகளை கலை கலாசார பீடம் தொடங்கியது.

- கலை கலாசார பீடத்தில் ''கல்வி'' பாடநெறியில் புதிய கௌரவ இளமானி பட்டப்படிப்பினை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவு ப.மா.ஆ.இன் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- கலை கலாசார பீடத்தில் வரலாறு பாடநெறியில் கௌரவ இளமானி பட்டப்படிப்பினை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவு தொடர்புடைய அதிகாரிகளின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- கல்வி, ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம் போன்ற பாடத் தொகுதிகள், கலை இளமானி பட்டப்படிப்பிற்கான புதிய முக்கிய பாடங்களாக அறிமுகப்படுத்தப்பட்டன.

- இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 13வது பொது பட்டமளிப்பு விழா 2020 செப்டம்பர் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.




- இலங்கை தொழிநுட்ப ஆய்விதழ் Sri Lankan Journal of Technology (SLJOT) தொழிநுட்ப பீடத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை தொழிநுட்ப ஆய்விதழானது மீளாய்வு செய்யப்பட்ட ஆய்விதழ்களில் ஒன்றாகும். இவ்வாய்விதழானது தொழிநுட்பத் துறையில் வெளியிடப்படும் புதிய ஆராய்ச்சிகளை அறிவிப்பதன் மூலம் தொடர்புடைய துறைகளில் முன்னேற்றத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் குறிப்பிட்ட கால இடைவெளியில் வெளியீடுகளைக் கொண்டிருக்கும்.



- தொழிநுட்ப பீடமானது 2020 இல் 13 மாணவர்களுடன் முதுகலை ஆராய்ச்சி பட்டப்படிப்பைத் தொடங்கியுள்ளது.

- உயர் கல்விக்கான மாணவர் எண்ணிக்கையினை அதிகரித்தல் எனும் தேசிய கொள்கைக்கு அமைய மாணவர் சேர்க்கையினை விரிவாக்க பல்கலைக்கழகத்திற்கு முடிந்தது. (விளக்கப்படம் 1.4).



விளக்கப்படம் 2.2 இறுதி ஐந்து கற்கை ஆண்டுக்கான மாணவர் உட்சேர்க்கை விபரம்

- விடுதி வசதிகள் கணிசமான அளவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் விடுதிக்கான தேவையைப் பூர்த்தி செய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் விடுதி வசதிகள் வழங்கப்படுகிறது.



விளக்கப் படம் 1.5: விடுதி வசதிகள் வழங்கப்பட்டவர்கள்: 2015 - 2020

- AHEAD - RIC (ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் வணிகமயமாக்கல்) இலிருந்து 40 மில்லியன் பெறுமதியான ஆராய்ச்சி மானியத்தை தொழிநுட்ப பீடம் பெற்றுள்ளது.

- பல்கலைக்கழகத்தால் நான்கு சர்வதேச மற்றும் உள்ளூர் ஆராய்ச்சி மாநாடுகளை நடாத்த முடிந்தது.

- 2020 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகமானது மொத்தமாக 128 ஆய்வுக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச அளவில் குறியிடப்பட்டதும் பரிந்துரைக்கப்பட்டதுமான ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் மொத்த வெளியீடுகளின் எண்ணிக்கை 383 ஆகும்.

- ஊழியர்களை உயர் தரமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஊக்குவிப்பதற்காகவும், உயர்தர ஆய்விதழ்களில் வெளியிடுவதன் மூலம் அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளைப் பரப்புவதற்காகவும் "உயர்தர ஆய்விதழ்களில் வெளியிடப்படும் ஆய்வுக்கட்டுரைகளுக்கான முதவை கௌரவங்கள்" என அழைக்கப்படும் ஒரு கௌரவ விருதினை, இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது 2019ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தியது. 2020ம் ஆண்டில் வழங்கப்பட்ட முதவை கௌரவ விருதுகளின் விபரங்கள் அட்டவணை 1.9ல் கொடுக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட ஆய்விதழ் வெளியீடுகள் மற்றும் 2020ம் ஆண்டில் நடாத்தப்பட்ட வருடாந்த ஆராய்ச்சி மாநாடுகளின் விபரங்கள் முறையே அட்டவணை 1.10 மற்றும் 1.11 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 1.9: 2020 ஆம் ஆண்டிற்கான முதவை கௌரவ விருதுகள்

பீடம்	2020 இல் வெளியிடப்பட்ட அதியுயர் ஆய்வுக்கட்டுரைகளுக்கான முதவை கௌரவ விருதுகளின் எண்ணிக்கை				
	200வது முதவைக் கூட்டம் (22.01.2020)	201வது முதவைக் கூட்டம் (13.05.2020)	202வது முதவைக் கூட்டம் (24.06.2020)	205வது முதவைக் கூட்டம் (19.08.2020)	207வது முதவைக் கூட்டம் (13.11.2020)
கலை கலாசாரம்	01	01	02	02	19
முகாமைத்துவ வர்த்தகம்	02	05	10	12	03
இஸ்லாமியக் கற்கைகள் அரபுமொழி					02
பிரயோக விஞ்ஞானங்கள்		01		05	05
தொழிநுட்ப பீடம்	01		01	01	
நூலகம்				03	
மொத்தம்	**04**	**07**	**13**	**23**	**29**

அட்டவணை 1.10: பல்கலைக்கழகத்தால் 2020ல் வெளியிடப்பட்ட ஆய்விதழ் வெளியீடுகள்

பீடம்	ஆய்விதழ் வெளியீடுகள்
கலை கலாசாரம்	களம்– தொகுதி.13 வெளியீடு. 3
முகாமைத்துவ வர்த்தகம்	சந்தைப்படுத்தல் ஆய்விதழ் – தொகுதி.5 வெளியீடு. 1 மற்றும் வெளியீடு. 2
	தகவல் முறைமை மற்றும் தகவல் தொழிநுட்ப ஆய்விதழ் – தொகுதி. 5 வெளியீடு. 2
	வணிகப் பொருளியல் ஆய்விதழ் - தொகுதி. 2 வெளியீடு. 1
இஸ்லாமியக் கற்கைகள் அரபுமொழி	இலங்கை இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீட ஆய்விதழ் (SLJAIS) - தொகுதி. 3, வெளியீடு. 2
பிரயோக விஞ்ஞானங்கள்	விஞ்ஞான ஆய்விதழ் - தொகுதி. 1 வெளியீடு. 1
தொழிநுட்பம்	இலங்கை தொழிநுட்ப ஆய்விதழ் – தொகுதி.1 வெளியீடு. 1 மற்றும் வெளியீடு. 2

புதிய பீடங்களைத் தவிர, ஏனைய நான்கு பீடங்களும் தங்களது வருடாந்த ஆராய்ச்சி மாநாட்டினைத் தொடர்ந்தும் நடாத்திவருகின்றன.

அட்டவணை 1.11: பல்கலைக்கழகத்தால் 2020ல் நடாத்தப்பட்ட வருடாந்த ஆராய்ச்சி அமர்வுகள் மற்றும் மாநாடுகள்

(இ) கட்டணம் அறவிடும் கற்கைநெறிகள் மீதான கட்டணங்கள் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு அக்கற்கைநெறிகளின் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டங்களின் அடிப்படையில் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் செலுத்தவேண்டிய விரிவுரையாளர் கட்டணங்களும் கொடுப்பனவுகளும் ஒதுக்கு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் முற்பணமாகப் பெறப்பட்ட வருவாயாக ஐந்தொகையில் காட்டப்படுகின்றன.

(ஈ) வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

(உ) மானியத்தின் மூலமான வருமானம் பங்களிப்பின் கட்டுப்பாடு அல்லது பங்களிப்பை பெறுவதற்கான உரித்து உறுதிப்படுத்தப்படும் போது அங்கீகரிக்கப்படுகின்றது.

(ஊ)அனுசரணை தொடர்பிலான நடவடிக்கைகள் அவை கிடைக்கப்பெற்றவுடன் அங்கீகரிக்கப்படுகின்றது.

(எ) ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

3.13.2. செலவீட்டு ஒப்புதல்

ஏற்பட்ட கிரயத்திற்கும் வருமானத்தின் குறித்த பொருட்களை உழைத்தமைக்கும் இடையிலான நேரடித்தொடர்பின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தினை கொண்டுசெல்வதிலும் மூலதனச் சொத்துக்களைப் பராமரிப்பதிலும் ஏற்பட்ட அனைத்து செலவுகளும் ஆண்டிற்கான மிகை /பற்றாக்குறையினை நோக்கிய வருமானத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பரீட்சைகள், செயலமர்வுகள், கற்கை நெறிகள் மற்றும் ஏனைய கல்வி நடவடிக்கைகள் மீதான செலவுகள் அவை பூர்த்தியானதும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.14. அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதியின் பின்னர் நிகழும் நிகழ்வுகள் கருத்திற்கொள்ளப்பட்டதோடு தேவையான போது பொருத்தமான சீராக்கல்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
கணக்குகளுக்கான குறிப்புகள்

குறிப்பு 01- ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் மனிதவள அபிவிருத்தி

திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	அட்டவணை	**01.01.2020** இல் கிரயம்	சேர்வு / மீள்மதிப்பீடு	அகற்றல்	**31.12.2020**இல் கிரயம்	**31.12.2019** இன் போதான மொத்த பெறுமானத்தேய்வு	**2020** ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு	**31.12.2020**இன் போதான மொத்த பெறுமானத்தேய்வு	**31.12.2020**இல் உள்ளவாறான தேறிய பெறுமதி
நிலம்	1.01	450,330,000	-	-	450,330,000	-	-	-	**450,330,000**
கட்டிடங்கள்	1.02	5,145,103,054	441,280,026	6,793,853	5,579,589,228	1,237,274,356	256,310,293	1,493,584,649	**4,086,004,579**
தளபாடம்	1.03	502,887,595	16,248,137	-	519,135,732	198,114,429	44,732,838	242,847,267	**276,288,465**
உபகரணம்	1.04	1,431,641,418	52,666,270	57,004,044	1,427,303,643	819,966,980	188,498,672	1,008,465,651	**418,837,992**
புத்தகங்களும் பருவ வெளியீடுகளும்		199,860,154	585,682	-	200,445,837	165,906,968	13,493,272	179,400,240	**21,045,597**
வாகனங்கள்	1.05	114,363,388	-	-	114,363,388	103,660,826	5,664,384	109,325,210	**5,038,178**
மென்பொருட்கள்	1.06	5,265,505	1,323,000	-	6,588,505	1,216,247	1,266,956	2,483,203	**4,105,302**
வீதி	1.07	158,629,534	51,097,869	-	209,727,402	150,135,971	17,619,812	167,755,783	**41,971,619**
தொலைபேசி மற்றும் வலையமைப்பு	1.08	47,672,367	-	-	47,672,367	44,068,859	3,603,508	47,672,367	**-**
மின்சார பரிமாற்ற வலையமைப்புகள்	1.09	50,192,158	-	-	50,192,158	18,632,431	4,543,842	23,176,273	**27,015,885**
நீர் விநியோக வலையமைப்புகள்	1.10	3,164,401	10,718,214	-	13,882,615	7,204,132	1,388,262	8,592,394	**5,290,221**
பட்டதாரி அங்கிகள்	1.11	3,690,803	-	-	3,690,803	3,690,803	-	3,690,803	**-**
கல்விசார் வெளியீடுகள் /சர்வதேச செயலமர்வு		18,323,463	612,880	-	18,936,343	10,846,059	2,498,590	13,344,649	**5,591,694**
கல்விசார் ஊழியர்களின் திறனைக் கட்டியெழுப்பல்		23,123,326	3,193,452	-	26,316,778	17,255,587	2,252,321	19,507,908	**6,808,870**
தர உத்தரவாதமும் அங்கீகாரமும்		10,007,913	546,045	-	10,553,957	2,041,276	2,078,673	4,119,949	**6,434,008**
ஆராய்ச்சி மற்றும் கல்விசார் அபிவிருத்தி		568,000	-	-	568,000	56,800	113,600	170,400	**397,600**
சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளல்		149,100	-	-	149,100	14,910	29,820	44,730	**104,370**
இறுதி வருட செயற்திட்டம்		76,808	-	-	76,808	7,681	15,362	23,042	**53,766**
மொத்தம்		**8,165,048,986**	**578,271,575**	**63,797,897**	**8,679,522,664**	**2, 780,094,313**	**544,110,206**	**3,324,204,519**	**5,355,318,145**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
கணக்குகளுக்கான குறிப்புகள்

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	அட்டவணை	2020 ரூபா	2019 ரூபா
குறிப்பு 02 – நடைபெறும் வேலை			
தொழிநுட்பத் துறைக்கான 3 மாடிக் கட்டிடம்		-	418,069,485
கிரிக்கெட் மைதானத்தின் மேம்பாடு		-	1,566,276
ஆண்கள் விடுதி மற்றும் ஊழியர் தங்குமிடத்திற்கான வீதி		-	2,882,229
கணித விஞ்ஞானங்கள் துறைக்கான புதிய கணனி ஆய்வகம்		-	552,698
கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான புதிய இருப்பிட வசதிகள்		81,164,894	26,460,000
		81,164,894	**449,530,688**
குறிப்பு 03 – நிதிச் சொத்துக்கள்			
நிலையான வைப்புக்கள்	3.01	25,904,408	35,284,825
		25,904,408	**35,284,825**
நிலையான வைப்புக்கள்- SFA நிகழ்ச்சிகள்			
வெளிவாரிப் பட்ட மற்றும் தொழில்சார் கற்கைகள் மையம்		117,776,172	108,422,086
பட்டபின்படிப்பு அலகு ~ FMC		5,410,768	5,043,881
பட்டபின்படிப்பு அலகு ~ FAC		136,078	126,262
		123,323,017	**113,592,229**
FD யிருந்து பெற வேண்டிய வட்டி			
தென்கிழக்கு பல்கலைக்கழகம்		199,687	-
வெளிவாரிப் பட்ட மற்றும் தொழில்சார் கற்கைகள் மையம்		369,574	933,153
பட்டபின்படிப்பு அலகு ~ FMC		60,614	-
பட்டபின்படிப்பு அலகு ~ FAC		1,524	-
		631,399	**933,153**
குறிப்பு 04 - பொருட்கள் / இருப்புக்கள்			
களஞ்சிய முற்பணக் கணக்கு – வழங்கல்கள்	4.01	5,742,079	7,218,387
களஞ்சிய முற்பணக் கணக்கு – பராமரிப்பு	4.02	3,372,600	3,875,016
		9,114,679	**11,093,403**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

கணக்குகளுக்கான குறிப்புகள்

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	அட்டவணை	2020 ரூபா	2019 ரூபா
குறிப்பு 05 – பெற வேண்டிய கணக்குகள்			
பாதுகாப்பு வைப்புகள்	5.01	5,253,929	5,253,929
இடர் கடன்	5.02	28,111,787	28,021,591
ஊழியர் கடன்	5.03	62,050	59,670
வாகனக் கடன்	5.04	176,000	376,000
கணனி கடன்	5.05	515,500	592,000
மோட்டார் சைக்கிள் கடன்	5.06	349,016	489,090
விழா முற்பணம்	5.07	292,500	518,750
சம்பள முற்பணம்	5.08	40,359	337,498
விசேட முற்பணம்	5.09	7,600	400
பிணை மீறல்	5.10	20,062,089	15,351,801
மகாபொல புலமைப்பரிசில் முற்பணம்	5.11	-	5,000
ஏனைய முற்பணம்	5.12	-	616,025
தபால் முத்திரை அச்சு இயந்திர முற்பணம்		32,188	51,122
ஆராய்ச்சி முற்பணம்	5.13	129,000	50,000
நூலக புத்தகங்கள் - (பருவ வெளியீடுகளுக்கான முற்பணம்)	5.14	-	72,820
இ.தெ.கி.ப இற்கான நிலுவைகள்	5.15	10,399,940	8,344,042
CEDPL இலிருந்தான நிலுவைகள்		8,840,335	7,168,477
பெறவேண்டிய சம்பளம்	5.16	3,253,494	3,748,863
MA and MBA இலிருந்தான நிலுவைகள்		1,059,015	547,872
PGU இலிருந்தான நிலுவைகள்- FOT		3,800	-
உள்ளக அலகுகளின் கொடுக்கல் வாங்கல்கள் தீர்ப்பனவு		(9,903,150)	(6,143,637)
		68,685,451	**65,461,313**
குறிப்பு 06 – காசும் அதற்கு சமமானவையும்			
மக்கள் வங்கி - 228 1001 7000 1696		10,233,836	2,016,672
மக்கள் வங்கி - 228 1001 7000 1700		34,665,004	2,413,799
மக்கள் வங்கி - 228 1001 9000 1704		7,826,004	1,704,773
மக்கள் வங்கி - 228 1001 0000 1708		211,773	281,273
மக்கள் வங்கி - 228 1001 5000 1715		17,351,344	2,680,981
மக்கள் வங்கி - 064 1001 7000 0025		1,080,065	212,194
மக்கள் வங்கி - 004 1001 5021 0926		-	71,169
மக்கள் வங்கி - 064 1001 6000 0950		367,973	1,188,591
மக்கள் வங்கி - 228 1001 6000 1692 (CEDPL)		28,937,824	5,549,197
மக்கள் வங்கி - 228 10014004 2429 (CEDPL)		16,300	16,300
மக்கள் வங்கி - 228 1001 2003 2544 (FMC)		14,346,142	10,603,378
மக்கள் வங்கி - 228 1001 5004 0340 (FAC)		2,368,721	404,221
மக்கள் வங்கி - 228 1001 6005 2714 (FT)		689,475	-
		118,094,461	**27,142,547**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
கணக்குகளுக்கான குறிப்புகள்

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	அட்டவணை	2020 ரூபா	2019 ரூபா
குறிப்பு 07 – மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள்			
ஞாபகார்த்த பரிசில் நிதியம்	7.01	248,000	248,000
குறுங்கால ICIT கற்கை நெறி		434,454	434,454
வெளிநாட்டு மாணவர்களுக்கான உதவித்தொகை		474,600	294,600
UNDP நிதி		165,078	165,078
ஆசியா நிறுவன ஆராய்ச்சி மானியம்		21,074	170,773
பால்நிலை சமத்துவ நிலையம்		511,421	511,421
FOE/ நிலப் பரிசோதனை		-	410
ப.க.மா.ஆ. வினால் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி		600,000	600,000
Sediment Survey & Geomorphology Survey		1,020,000	-
		3,474,626	**2,424,736**
குறிப்பு 08 - மூலதன மானியம்			
மூலதன மானியம் செலவிடப்பட்டது	08.01	1,696,026,058	2,147,827,686
மூலதன பங்களிப்பு – MRR	08.02	99,871,217	104,770,589
மூலதன மானியம் செலவிடப்பட்டது ~IRQUE	08.03	80,705,973	89,032,833
மூலதன பங்களிப்பு – Kuwaith நிதி	08.04	1,970,681,385	2,067,356,900
மூலதன பங்களிப்பு – MOHE	08.05	1,149,815,100	1,206,221,462
மூலதன பங்களிப்பு - செலவிடப்படாதது		78,960,578	-
நன்கொடை	08.06	138,002,698	152,159,731
		5,214,063,009	**5,767,369,201**
குறிப்பு 09 - ஒதுக்கங்கள்			
திரண்ட நிதி		(422,634,545)	(1,717,375,358)
காலக்கழிவு மற்றும் தேய்மானத்தின் தேறிய மீதி (			
முந்தைய ஆண்டுகளின் சீராக்கல்)		(63,797,897)	1,524,397,044
வருடத்திற்கான தேறிய பற்றாக்குறை அல்லது மிகை		(16,054,534)	(229,656,231)
		(502,486,976)	**(422,634,545)**
மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்	09.01	510,537,790	450,200,000
		510,537,790	**450,200,000**
சுய நிதியிடல் நிகழ்ச்சிக்கான நிதிகள்			
பீட அபிவிருத்தி நிதி - CEDPL- FAC		6,435,938	5,181,785
பீட அபிவிருத்தி நிதி - CEDPL - FMC		835,205	3,205,762
பீட அபிவிருத்தி நிதி - PGU - FAC		71,082	58,754
பீட அபிவிருத்தி நிதி - PGU - FMC		2,282,845	1,951,358
பீட அபிவிருத்தி நிதி - PGU - FT		2,000	-
ஆராய்சி வெளியீட்டு நிதி - CEDPL - FAC		6,100,899	5,339,462
ஆராய்சி வெளியீட்டு நிதி - CEDPL - FMC		2,691,502	2,409,194
ஆராய்சி வெளியீட்டு நிதி - PGU - FAC		106,623	88,131

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
கணக்குகளுக்கான குறிப்புகள்

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	அட்டவணை	2020	2019
		ரூபா	ரூபா
சுய நிதியிடல் நிகழ்ச்சிக்கான நிதிகள் தொடர்ச்சி...			
ஆராய்சி வெளியீட்டு நிதி - PGU - FMC		3,424,267	2,927,036
ஆராய்சி வெளியீட்டு நிதி - PGU - FT		1,200	-
CEDPL அபிவிருத்தி நிதி		9, 611,282	8,800,777
PGU அபிவிருத்தி நிதி - FMC		1,564,270	1,365,487
PGU அபிவிருத்தி நிதி - FAC		35,541	29,377
PGU அபிவிருத்தி நிதி - FT		2,000	-
		33,164,654	**31,357,123**
குறிப்பு 10 – பணிக்கொடை			
பணிக்கொடைக்கான ஒதுக்கம்	10.01	391,361,307	336,598,036
		391,361,307	**336,598,036**
குறிப்பு 11- சட்ட வழக்குகளுக்கான ஒதுக்கம்			
மீளளிக்கக்கூடிய வைப்பு - விஞ்ஞான ஆய்வுகூடம்	11.01	657,800	745,800
மீளளிக்கக்கூடிய வைப்பு - நூலகம்	11.02	163,400	181,100
மீளளிக்கக்கூடிய வைப்பு - விடுதி	11.03	3,328,600	2,728,900
மீளளிக்கக்கூடிய வைப்பு - ஒப்பந்தக்காரர்கள்	11.04	211,500	114,000
மீளளிக்கக்கூடிய வைப்பு - வழங்குனர்கள்	11.05	581,000	522,000
பிடிமானத் தொகை - ஒப்பந்தக்காரர்கள்	11.06	24,491,391	16,659,673
பிடிமானத் தொகை - வழங்குனர்கள	11.07	11,385,214	10,035,839
இ.தெ.கி.ப.க இலிருந்தான நிலுவைகள்	11.08	22,838,376	67,186,220
முற்பணமாக பெற்றவை - SFA நிகழ்ச்சிகள்		62,146,095	37,269,800
SFA நிகழ்ச்சிகளிலிருந்து செலுத்த வேண்டியவை		430,366	470,199
உள்ளக அலகுகளின் கொடுக்கல் வாங்கல் தீர்ப்பனவு		(13,000,000)	(10,000,000)
		113,233,742	**125,913,531**
குறிப்பு 12 - ஏனைய வருமானம்			
பதிவுக் கட்டணங்கள்		4,203,940	4,020,155
பரீட்சைக் கட்டணங்கள்		380,675	319,780
வட்டி		3,344,245	4,094,519
வாடகை		2,671,568	2,663,045
விற்பனைகள்		2,638,937	970,284
தண்டப்பணங்கள்		2,024,042	6,173,956
நானாவித வருமானங்கள்		9,559,154	15,601,967
		24,822,561	**33,843,705**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

கணக்குகளுக்கான குறிப்புகள்

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	அட்டவணை	2020	2019
		ரூபா	ரூபா
குறிப்பு 13 - சுய நிதியிடல் கற்கைகளிலிருந்தான வருமானம்			
வெளிவாரிப்பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்		23,366,466	27,996,860
பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FMC		5,392,750	8,808,386
பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FAC		143,984	194,500
பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FT		36,000	-
		28,939,200	**36,999,746**
குறிப்பு 14 - சுய நிதியிடல் கற்கைகளுக்கான செலவு			
வெளிவாரிப்பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கை நிலையம்		8,478,024	11,524,416
பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FMC		4,748,972	9,545,259
பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FAC		58,174	197,238
பட்டப்பின்படிப்பு கற்கை பிரிவு - FT		33,819	-
		13,318,989	**21,266,912**

21. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ஈஎன்பீ/பிரீ/சி/எஸ்ஈயூஎஸ்எல்/01/20/02 20 ஜூலை 2021

உப வேந்தர்,
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1. நிதிக்கூற்றுக்கள்

முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2020 டிசம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றக்கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகள் உள்ளடங்களாக நிதிக் கூற்றுக்களின் குறிப்புகளை உள்ளடக்கிய 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆவது பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108 (1) ஆவது பிரிவின் படி இந்த அறிக்கையில் காணப்படுகின்ற எனது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானங்கள் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையுடன் வெளியிடப்பட வேண்டும். அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்,

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலமானது இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமம் 07 இன் 65 ஆவது பந்தியின் படி வருடாந்தம் மீளாய்வு செய்யப்படவில்லை. ரூபா. 483,321,635 பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டது, ஆனாலும் மீளாய்வாண்டின் இறுதியில் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமம் 03 இற்கு இணங்க மதிப்பிடப்பட்ட பிழையை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 07ன் 69வது பந்தியின் அடிப்படையில் ஒரு சொத்தின் தேய்மானமானது அப்பொருள் பயன்படுத்த தயாராக உள்ள நிலையில் இருந்து ஆரம்பிக்கும். இருப்பினும், 2017 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா. 39,399,513 பெறுமதியான 8 ஆய்வக உபகரணங்கள் மார்ச் 04, 2021 வரையிலும் பயன்படுத்தத் தயாராக இல்லை, பொருட்கள் பெறப்பட்ட திகதியிலிருந்து தேய்மானம் கணக்கிடப்பட்டது. இதன் விளைவாக, திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் பொது ஒதுக்கம் போன்றன ரூபா. 16,505,637 இனால் முறையே நிதிநிலை அறிக்கைகளில் மிகைப்படுத்தியும் குறைத்தும் காட்டப்பட்டுள்ளன.

(இ) வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்றல் மையத்திற்கான காற்றுப் பதனாக்கிகள் ரூபா. 3,979,048 செலவில் செப்தெம்பர் 2020 இல் சுயநிதிச் செயற்பாடுகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. இருப்பினும், சொத்துக்களுக்கான செலவு, மீளாய்வாண்டில் காலக்கழிவாக எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக வருமானமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா. 3,683,966 தேறிய தொகையானயினால் நிதிநிலை அறிக்கைகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட ரூபா. 57,004,044 கிரயமுடைய அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் பேரவை குறிப்பாணையின்படி ஜூலை 01, 2020 அன்று 2 முதல் 5 ஆண்டுகள் வரையிலான கூடுதல் ஆயுட்காலத்துடன் மொத்தமாக ரூபா. 20,637,790 வாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இருப்பினும், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட

சொத்துகளுக்கான தேய்மானத்தைக் கணக்கிடுவதில் ஏற்பட்ட எண்கணிதப் பிழை காரணமாக, தேய்மானமானது ரூபா. 3,310,493 இனால் மீளாய்வாண்டில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே, நிதி ஆண்டிற்கான பற்றாக்குறையானது அத்தொகையினால் நிதி நிலை அறிக்கைகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(உ) 2018 ஆம் ஆண்டில் உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்துதல் (AHEAD) திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 23,055,912 கிரயமுடைய நாற்பத்தி நான்கு iMac கணனிகள் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAUSS) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2020 இற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்.

ஏனைய தகவல்கள் பல்கலைக்கழகத்தின் 2020 இற்கான ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது, ஆனால் கணக்காய்வாளரின் அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்ற நிதிநிலை அறிக்கைகள் மற்றும் எனது கணக்காய்வாளரின் அறிக்கை ஆகியவை சேர்க்கப்படவில்லை. ஏனைய தகவல்களுக்கு நிர்வாகமே பொறுப்பு.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எனது கருத்து ஏனைய தகவல்களை உள்ளடக்கவில்லை அத்தோடு நான் எந்த விதமான உறுதியான முடிவையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிநிலை அறிக்கைகளின் எனது கணக்காய்வு தொடர்பாக, மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களைப் படித்து, அவ்வாறு செய்யும்போது, ஏனைய தகவல்கள் நிதிநிலை அறிக்கைகளுடன் முரணாக உள்ளதா அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவு அல்லது வேறுவகையில் தவறாகக் குறிப்பிடப்பட்டதாகத் தோன்றுகிறதா என்பதைக் கருத்தில்கொள்ளல்.

இந்த கணக்காய்வாளரின் அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்ற ஏனைய தகவலின் அடிப்படையில் நான் செய்த பணியின் அடிப்படையில், இந்த ஏனைய தகவலில் தவறான அறிக்கை இருப்பதாக நான் முடிவு செய்தால், அந்த உண்மையை நான் தெரிவிக்க வேண்டும். இது தொடர்பாக தெரிவிக்க எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகத்தின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான

உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியான கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018ன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவைத் தவிர, எனது பரீட்சித்தலில் காணப்படுகின்றனவான கணக்காய்விற்குத் தேவையான அனைத்து

தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கிறேன், 2018ன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (அ) இன் பிரகாரம், முறையான கணக்குப் பதிவுகள் பல்கலைக்கழகத்தால் வைக்கப்பட்டுள்ளன.

2.1.2 2018ன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iii) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டோடு ஒத்துப்போகின்றன.

2.1.3 2018ன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iv) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளையும் உள்ளடக்குகிறது. பந்தி 1.2 (அ), இனைத்தவிர

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே பல்கலைக்கழகத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் பல்கலைக்கழகம் இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல், தவிர;

சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு	விபரம்
அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை.	
(i) VIIம் அத்தியாயத்தின் 02(XV)ம்	2020 ஆம் ஆண்டில் முதலீடு செய்த

பிரிவு, 1971 இன் 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 11வது பிரிவு மற்றும் ஜூன் 2003 திகதியிட்ட பொது நிறுவனங்களின் சுற்றறிக்கை எண். PED/12 இன் 8.2.2ம் பிரிவு	நிலையான வைப்புத்தொகையினை மொத்தம் ரூபா. 31,559,910 தொடர்பில் நிதி அமைச்சு, கல்வி அமைச்சு, மற்றும் பல்கலைக்கழகத்தின் நிதிக் குழு போன்றவற்றின் இணக்கம் மற்றும் முன் அனுமதி பெறப்படவில்லை.
(ii) XX ஆம் அத்தியாயத்தின் 3 (1)ம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிரூப கடிதம்.	அனைத்துப் பதவியணியினரும் தங்களது வருகைகள் மற்றும் வெளியேற்றங்களை கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்தல் வேண்டும். இருப்பினும், கல்விசார் பதவியணியினர் அதற்கு இணங்கவில்லை.

2.2.3 2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பல்கலைக்கழகம் அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

2.2.4 2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பல்கலைக்கழக வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல், தவிர;

2.3 ஏனைய கணக்காய்வு அவதானங்கள்

(அ) இடர் கடன், திருவிழா முன்பணம், சம்பள வரவுகள், பத்திர மீறல்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய ரூபா. 9,719,274 கூட்டுத்தொகையானது 31 டிசம்பர் 2020 இன்போதிலும் 01 முதல் 19 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு மீளப்பெறப்படாமல் நிலுவையிலுள்ளது.

(ஆ) ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய பிடிமானத் தொகை மொத்தம் ரூ. 12,834,860, தொகையானது 2020 டிசம்பர் 31 இன்போது 2 முதல் 7 ஆண்டுகள் வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாமல் உள்ளது. இது சம்பந்தமாக, பிடிமானத் தொகையைச் செலுத்தவோ அல்லது பல்கலைக்கழகத்தின் வருமானமாகக் கருதவோ போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 93.5 மில்லியன் பெறுமதியான ஆய்வக உபகரணங்கள் 1 முதல் 4 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிகளில் உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் விளைவற்று விடப்பட்டிருந்தது. மேலும், மொத்தத் தொகை ரூ. 461,577 கிரயமுடைய 02 வளிபதனாக்கிகள், 20 கணனி மேசைகள் மற்றும் ஒரு மின்னணு திரை மற்றும் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்றல் மையத்திற்கு ஒதுக்கப்பட்ட 02 விரிவுரை மண்டபங்கள் 2013 முதல் 2016 வரையிலான காலப்பகுதியில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை.

(ஈ) CNC Machine EDM Solid இனை கொள்முதல் செய்வதற்கான கேள்விமனுவானது 25 நவம்பர் 2016 அன்று வழங்குனர் ஒருவருக்கு ரூ.11,647,200 இற்கு வழங்கப்பட்டது. இருப்பினும், கேள்விமனுவினை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் விலை உயர்வு காரணமாக வழங்குனர் அதனைத் தொடரவில்லை. அதனைத்தொடர்ந்து, விலைமனுவிற்கான மற்றொரு அழைப்பிதழ் விளம்பரம் செய்யப்பட்டு ரூ. 21,104,229 தொகைக்கு 2019 இல் மற்றொரு வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, பல்கலைக்கழகம் முதலில் வழங்கப்பட்ட விலையை விட கூடுதல் தொகையாக ரூ. 9,457,029 வினை செலுத்தியது.

(உ) பிரயோக விஞ்ஞான பீடத்திற்காக ஆய்வுகூடத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் வேலைகள் 2011 ஒக்தோபர் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ரூபா. 84,156,395 செலவில் 2014 பெப்ரவரி 15 ஆந் திகதி முடிவடைந்திருந்தன. மேலும் மின்பொருத்துதல்களுக்காக 2016ம் ஆண்டில் ரூபா 1,856,467 செலவிடப்பட்டது. இருப்பினும், தேவையான ஆய்வுகூட உபகரணங்களை வாங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் ஆய்வகத்திற்கு தேவையான வடிகால் எரிவாயு மற்றும் நீர்இணைப்புகள் முழுமையாக முடிக்கப்படாத காரணத்தால் ஆய்வகத் தொகுதியானது இன்று வரையிலும் உரிய நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாமல் 6 ஆண்டுகளுக்கும் மேலாக விளைவற்றுக் காணப்பட்டது.

டபுல்யூ.பீ.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

22. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான அவதானங்கள்

எஸ்.ஈ.யூஎஸ்.எல்/வீசி/ஏஆர் /2020/02

04.08.2021

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

தேசிய கணக்காய்வு அலுவலகம்,

கொழும்பு.

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இது 2020 ஜூலை 20 ஆம் திகதிய தங்களது அறிக்கை தொடர்பானது. அறிக்கையில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கான எங்கள் அவதானிப்புகளை கீழே தருகிறோம்.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கட்டிடம், அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் போன்றவை 2020 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, 2020 நிதிக்கூற்றிலும் இணைக்கப்பட்டன. கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்ட ஏனைய வகையான எஞ்சிய பொருட்களை மீள்மதிப்பீடு செய்ய பொது நிர்வாகப் பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) பொது திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதியின் வரையரை காரணமாக, அனைத்து கொள்முதல்களும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல், கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வக உபகரணங்கள், அவற்றின் விநியோகம் மற்றும் நிறுவலின் போது பயன்படுத்தப்படும் எனக்கருதி, பயனர் துறைகளின் தேவை மற்றும் அவசியத்தின் அடிப்படையில் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும், உபகரணங்களின் உத்தரவாதக் காலமானது வழங்குனரால் விநியோகம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஆரம்பமாகும்.

உபகரணங்களை கொள்வனவு செய்வதில் பின்பற்றப்படும் வழமையான நடைமுறையைப் போல், இப் பொருட்களும் பயன்படுத்தத் தயாராகவிருந்த ஏனைய இயந்திரங்களுடன் சேர்த்து நிறுவப்பட்டதுடன், அதற்கேற்ப தேய்மானம் கணக்கிடப்பட்டது.

கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மாணவர்களின் செயன்முறை அமர்வுகளுக்குப் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வது பயனர் துறைத் தலைவர் மற்றும் பீடாதிபதியின் பொறுப்பாகும். உபகரணங்கள் பயன்படுத்தப்படவில்லை என்றால், அது பீடாதிபதியின் திறமையின்மையாகும்.

(இ) மார்ச் 01, 2016ம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை 04/2016 இன் பிரிவு 5.5.2 இன் படி, பயன்படுத்தப்பட்ட தொகையானது (காலக்கழிவு செய்யப்பட்ட தொகை அல்ல) அபிவிருத்தி நிதியிலிருந்து (Respective Vote) கழிக்கப்பட்டு வேறு வருவாய் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும், நிதிநிலை அறிக்கைகளை சிறப்பாக வழங்குவதற்கு, கணக்காய்வு வினவலில் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, மூலதனச் செலவினத் தொகையை விரிவுபடுத்தவும், சொத்துகளின் ஆயட்காலத்தை பயன்படுத்தப்பட்ட தொகையை ஆண்டின் வருமானமாக அங்கீகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) சொத்துக்களின் மீள்மதிப்பீடு பல்கலைக்கழகத்தால் முதன்முறையாக மேற்கொள்ளப்பட்டது. அச்செயற்பாட்டில், கணக்காய்வு வினவலில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக உபகரணங்களும் விளையாட்டுப் பொருட்களும் 2020 ஆம் ஆண்டில் முதல் முறையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டன.

அதன்படி, தொகுப்பில் உள்ள நிலையான சொத்துகள் பதிவேடு அதே ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகையின்படி புதுப்பிக்கப்பட்டது. இருப்பினும், மென்பொருள் வழங்குனரால் குறியீட்டில் (coding) ஏற்படுத்தப்பட்ட பிழையின் காரணமாக, மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மேற்கூறப்பட்ட சொத்துக்களின் தேய்மானத்தைக் கணக்கிடுவதில் ஒரு கணக்கீட்டுப் பிழை ஏற்பட்டது. எனவே, ரூ. 3.3 மில்லியன் இலுள்ள வித்தியாசத்தை 2021 நிதியாண்டில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) AHEAD திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் இ.தெ.கி.ப.க இல் உள்ள செயற்பாட்டு தொழிநுட்ப செயலகத்தால் (OTS) தனித்தனியாக பராமரிக்கப்பட்டு கொழும்பில் உள்ள செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு உதவி குழுவிற்கு (OMST)

அனுப்பப்படுகிறது. எவ்வாறாயினும், OTS இலிருந்து தகவல்களைப் பெற்ற பின்னர், கணக்காய்வு வினவலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வருடாந்த அடிப்படையில் புள்ளிவிபரங்களை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2020 இற்கான ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1

2.2.2

(i). 2020ம் ஆண்டில், நிதி மீதிகள் மற்றும் பிணைமுறித் தொகைகள் மாத்திரமே நிலையான வைப்புகளில் வைப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், அவற்றை நிலையான வைப்பில் வைப்பிலிடுவதற்கு முன்னர். கணக்காய்வு வினவலிலும் அதில் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறும், நிதியமைச்சு, கல்வி அமைச்சு (நிரல் அமைச்சு), பல்கலைக்கழக பேரவை மற்றும் நிதிக் குழுவின் இணக்கம் மற்றும் முன் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்,

(ii). ஒரு பொதுவான நடைமுறையாக, இலங்கையில் உள்ள பொது பல்கலைக்கழக அமைப்பில் கல்விசார் ஊழியர்களின் உள் வருகைகள் மற்றும் வெளிச் செல்லுகைகள் பேணப்படுவதில்லை. மேலும், இந்த விடயம் தொடர்பில் கணக்காய்வு வினவல்களில் தொடர்ச்சியாக கேட்கப்படுகின்ற போதிலும், கல்விசார் ஊழியர்களுக்கு இதனை நடைமுறைப்படுத்துவதில் பல்கலைக்கழக முறைமை சவால்களை எதிர்கொள்கிறது.

2.3. ஏனைய கணக்காய்வு அவதானங்கள்

(அ)

பெயர்/விளக்கம்	தொகை	நிலை
இடர் கடன்		
இம்தியாஸ், ஏஆர்எம்.	29,058.00	கடன் நிலுவையினை மீளப் பெறுவதற்காக திரு. ஏஆர்எம். இம்தியாஸ் இற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
செஹாம், ஏ.எம்	49,984.00	ஏனைய நிலுவைத் தொகையை மீளப்பெறுவதற்காக ஏற்கனவே நடவடிக்கை

		எடுக்கப்பட்டுள்ளது.
புதுவருட முற்பணம்		
ஜெயகாந்தன், ஆர்.	10,000.00	ஏனைய நிலுவைத் தொகையை மீளப்பெறுவதற்காக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
சம்பளம் பெறவேண்டியவைகள்	1,874,776.00	ஏனைய நிலுவைத் தொகையை மீளப்பெறுவதற்காக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (8 ஊழியர்கள்)
ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிறுவனங்கள்	242,990.00	குறிப்பிட்ட பெற வேண்டியவைகளை மீளப்பெறுவதற்காக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பிணை முறிவு		
இம்தியாஸ், ஏஆர்எம்.	1,043,137.22	பிணைத் தொகை மற்றும் ஏனைய நிலுவைகளை மீளப்பெறுவதற்காக திரு. ஏ.ஆர்.எம். இம்தியாஸ் இற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மாஹிர், எம்.எம்.எம்	345082.21	மாஹிர். எம்.எம்.எம் இன் பிணை முறித்தொகையை பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஜெஸ்மி, ஏ.ஆர்.எஸ்.	6,124,246.24	இ.தெ.கி.ப.க. ஜெஸ்மி, ஏ.ஆர்.எஸ். உடன் தொடர்பு கொண்டுள்ளதுடன் பிணை முறித் தொகையை மீளப்பெற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.
மொத்தம்	**9,719,274.00**	

(ஆ) பிடிமானத்தொகை நிலுவைகளை செலுத்த அல்லது இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகவுள்ள உரிமை கோரப்படாத நிலுவைத் தொகையை சம்பந்தப்பட்ட பிரிவுகளின் பரிந்துரையுடன் பல்கலைக்கழக வருவாய்க்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) கொள்வனவு செய்யப்பட்ட பெரும்பாலான உபகரணங்கள் உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. புதிதாக தாபிக்கப்பட்ட பீடமாக இருப்பதால், சூழ்நிலைகள் மற்றும் அவசரத்தின் அடிப்படையில் ஒரே நேரத்தில் தேவையான இடம் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொள்ள அப்பீடத்தின் துறை திட்டமிட்டிருந்தது. இட விரிவாக்கத்திற்கான மூலதன நிதியைப் பெற்றுக்கொள்வதில் உள்ள வரையரை காரணமாக, சில உபகரணங்களை இயக்குவதில் தாமதம் ஏற்பட்டது.

(ஈ) மொத்தம் ரூ. 45 மில்லியன் மதிப்பிடப்பட்ட பின்வரும் 04 பொருட்களை, 01.11.2016 வரையிலான ஏலப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்துடன்

கொடுக்கப்பட்ட 04 உருப்படிகளின் ஏலத்தை ஈடுகட்ட ரூ. 900,000 ஏலப் பாதுகாப்புத் தொகையாக கோரி தேசிய போட்டி கேள்விமனு கோரல் முறை (NCB) மூலம் கேள்விமனுக்கள் கோரப்பட்டன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொ இல	பொருட்களின் பெயர்	மதிப்பிடப் பட்ட தொகை ரூ. (மில்லியன்)	மதிப்பிடப் பட்ட தொகையின் படி ஏலப் பாதுகாப்புத் தொகை (2%)	பெறப்பட்ட உண்மையான கேள்விமனுத் தொகை (பிரத்தியேக பெறுமதிசேர் வரி)	பெற்றுக்கொள்ளப்பட்ட உண்மையான கேள்விமனுக்களின் படி ஏலப் பாதுகாப்புத் தொகை	வழங்கப்பட்டது
01.	CNC Vertical Milling Machine	12	240,000	12,333,000	246,660	Samson Engineer's (PVT) Ltd.
02.	CNC training Centre	10	200,000	11,225,000	224,500	Samson Engineer's (PVT) Ltd.
03.	CNC Machine EDM Solid	10	200,000	10,128,000	202,560	CMC Engineering Expert GMBH
04.	CNC Machine Wire Cut EDM	13	260,000	11,054,000	221,080	API Traders (PVT) Ltd.
	மொத்தம்	45	900,000	44,740,000	894,800	

- இதன்படி, மேற்கூறப்பட்ட 04 பொருட்களுக்கு 08 வழங்குனர்களிடமிருந்து கேள்விமனுக்கள் பெறப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து பெறப்பட்ட அனைத்து கேள்விமனுக்களும் 08.07.2016 அன்று திறக்கப்பட்டன.

- TEC (TEC உறுப்பினர்கள் ஏனைய பிரபல்யமான பல்கலைக்கழகங்களின் நிபுணர்கள்) மற்றும் DPC கூட்டங்களை நடாத்துவது போன்ற சில உள்ளக தாமதங்கள் ஏற்பட்டதால், மேலே உள்ள கேள்விமனுப் பிணை செல்லுபடியாகும் காலத்தை 30.11.2016 வரை நீட்டிக்குமாறு அனைத்து வழங்குனர்களையும் 26.10.2016 அன்று கோரினோம். அத்துடன் இந்த காலகட்டத்தில் நாங்கள் முறையே 18.11.2016 மற்றும் 24.11.2016 ஆகிய திகதிகளில் TEC மற்றும் DPC கூட்டங்களை நடாத்தி, மேலே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடி தேர்ந்தெடுக்கப்பட்ட 03 வழங்குனர்களுக்கு 25.11.2016 அன்று வழங்களுக்கான கடிதத்தை அனுப்பியிருந்தோம்.

- இருப்பினும், CMC Engineering Expert GmbH நீட்டிக்கப்பட்ட கேள்விமனுப் பிணையிணை சமர்ப்பிக்கவில்லை, அதற்குப் பதிலாக, அவர்கள் அவர்களது வழங்குனர் விலையை உயர்த்தியதால், தங்களால் மேலே குறிப்பிட்ட கேள்வியைத் தொடர முடியவில்லை என்று எங்களுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

- அதைத்தொடர்ந்து, CMC Engineering Expert GmbH இன் கடிதத்தின் அடிப்படையில், இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கவும் பரிந்துரைக்கவும் TEC கூட்டத்தை நாங்கள் ஏற்பாடு செய்தோம், அதன்படி, அடுத்த தொகையைக்கோரிய கேள்வி மனுதாரருக்கு வழங்குவதற்கு TEC பரிந்துரைத்தது. இருப்பினும், இந்த நேரத்தில் நிதி கிடைக்காததாலும், கேள்வி மனுவின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்ததாலும், இக்கொள்முதல் தொடர்ந்தும் செயற்படுத்தப்படவில்லை.

- பிணைப் பத்திரத்தின் காலாவதி மற்றும் பிணைப் பத்திரத்தின் நீட்டிப்பைப் பெறாத காரணத்தால், CMC Engineering Expert GmbH இடமிருந்தான கேள்வி மனு மதிப்பு ரூ. 10,128,000 விற்கான CNC machine EDM Solid வழங்கல் தொடர்பில், கேள்விமனு பிணை ரூ. 202,560 வினை மீளப்பெற எங்களிடம் போதுமான அவகாசம் இருக்கவில்லை.

  மேலே உள்ள கேள்விமனுவின் செல்லுபடியாகும் காலம் 31.10.2016 அன்று முடிவடைந்ததால், அதே கேள்விமனுவினை எங்களால் தொடர முடியவில்லை. எனவே, போட்டியாளர்களுக்கு போதுமான வாய்ப்புகளை வழங்கி தேசிய போட்டி கேள்விமனுவின் கீழ் 20.06.2018 அன்று கேள்விமனு மீண்டும் கோரப்பட்டது. ஐரோப்பிய தயாரிப்பான புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் பிறப்பிட நாடு மற்றும் உற்பத்தி செய்த நாடு போன்றவை (மேலே குறிப்பிடப்பட்டது தைவானில் இருந்து வந்தவை) விலை வேறுபாட்டிற்கான முக்கியமாக காரணமாகும். பொதுவாக, தாய்வான், ஆசிய மற்றும் சீன தயாரிப்புகளை விட ஒரே மாதிரியான விபரக்குறிப்பு கொண்ட இவ் வகை ஐரோப்பிய தயாரிப்புகளின் செயற்றிறன் கணிசமான அளவு அதிகமாக உள்ளது. அதுமட்டுமின்றி, 02 வருட காலப்பகுதியில், நாட்டின் பணவீக்கம் மற்றும் விலை ஏற்ற இறக்கம் காரணமாக விலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

(உ) நீர் வழங்கல், வடிகால் மற்றும் எரிவாயு வழங்கல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன, 2021 திசெம்பர் நடுப்பகுதிக்குள் அப்பணிகளை பூரணப்படுத்த முடியும்.

பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம்

உப வேந்தர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பிரதிகள். சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்